கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

25-11-1973

40 காசு





உங்கள் மகளின் எதிர்கால வாழ்க்கைக்கு பொறுப்பு நீங்கள்

அவளது வருங்கால, முற்றிலும் சுகமான வாழ்க்கையை நிச்சயப்படுத்துவதற்கு இன்றே பணம் சேமிக்கத் தொடங்குங்கள்.

சேமிக்கவும் மற்றும் கரண்ட், ஸேவிங்ஸ், ஃபிக்ஸெட், ரெக்கரிங் டிபாஸிட்டுகள் ஆகிய கணக்கு தொடங்குவதற்கான எல்லாவித சௌகரியங்களையும் வழங்குகின்றோம்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO-3/73



உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



அட்டையில் :

வெள்ளைமலர் அன்னவாத்து
கொள்ளை யழகுதான்
பிள்ளைகளே துள்ளிவந்து
அள்ளிப் பருகுங்கோ!


வண்ணப்படம் : அஸத்

கோகுலம்

மலர் 2 : இதழ் 17

நவம்பர் 25, 1973

பிரமாதீச, கார்த்திகை 10



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10—00
ஆறு மாதம் ... ரூ. 5—00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15—00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25—00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

அக்கண மணமருள் பெருமான்!

நதிகள் யாவும் கடலுடன் கூடுமாப் போல் ஆன்மாக்கள் இறைவனிடம் பொருந்த வேண்டும்.

சீவன் சிவனுடன் இரண்டறக் கலந்து நிற்பது சிவாத்வைதம் என்பர்.

இத்தகு சிவாத்வைதத்தை அருளுவது ஓங்காரமாகும். ஓங்காரவடிவுடையவர் விநாயகமூர்த்தி. அவர் தம்மை வழிபடும் அடியார்களுக்கு சிவாத்வைதமாகும் திருமணத்தைச் செய்து அருள் புரிவார்.

இதனை விளக்கும் வரலாறுதான் வள்ளியம்மை திருமணம்.





பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

திருமாலின் திருவிழியில் பிறந்தவள் சுந்தரவல்லி. சரவணப் பொய்கையில் கடுந் தவம் புரிந்து, கந்தவேளின் கட்டளையின்படி வள்ளிமலையில் தவம் செய்தாள்.

திருமால் சிவ முனிவராகப் பிறந்து ஒருபுறம் மாதவம் புரிந்துகொண்டிருந்தார்.

மகாலட்சுமி மான் வடிவாக வந்து உலாவினாள். அம்மானைச் சிவ முனிவர் விரும்பிப் பார்த்து அருளினார். கடவுளர் தன்மையில் கண்டதும் தவவொளி மான் வயிற்றில் பாய்ந்தது. மா
கருக் கொண்டது.

பத்துத் திங்களுக்குப் பின் வேட்
வர்கள் அகழ்ந்த வள்ளிக் குழியில் மா
பிரசவித்தது. குட்டி தன் இனமா
இல்லையென்று உணர்ந்து மான் வி
கிற்று. வந்த வேலை முடிந்தவுட
மான் வைகுந்தம் போய் விட்டது.

குழந்தை மரகதச் சிலை போ
விளங்கியது. குழந்தையின் அழுகுரலை
கேட்ட வேட்டுவ மன்னன் நம்பிராஜ
மகிழ்ந்தான்.

உபேந்திரன் நம்பி ராஜனுகப் பிறந்து பெண் குழந்தை வேண்டும் என்று தவம் புரிந்தான். அந்தக் குழவியை எடுத்து வள்ளியென்று பேர் சூட்டி வளர்த்தான்.

வள்ளி வளர்ந்தபின் தினைப்புனத்துக்குக் காவல் புரியச் செய்தான்.

உள்ளமாகிய வயலில் ஆணவமாகிய காட்டை வெட்டி, அகங்காரமாகிய கல்லைப் பிளந்து மௌனம் என்ற வித்தை விதைத்து, அன்பு என்ற நீரைப் பாய்ச்சி, சாந்தமாகிய வேலிகோலி, ஞானப் பயிர் காத்து நின்ருள் சிவனுகிய வள்ளி.


அந்த ஞானப் பயிரில் தோன்றும் முக்திக் கதிரைப் பாழ்படுத்தக் காமக் குரோதம் முதலிய பறவைகள் சூழ்ந்தன. சிவனுகிய வள்ளி திடப்பிரக்ஞை என்ற பரண்மீது இருந்து பக்தி என்ற கவணில் இறைவன் நாமங்களாகிய கற்களை விட்டு ஞானப் பயிரைக் காவல் புரிந்தாள்.

அங்கே சிவமாகிய முருகன் விருத்த வடிவராக வந்து சேர்ந்தார். வள்ளிக்குப் பாசபந்தம் இருந்ததை உணர்ந்தார்.

அப்போது விநாயகப் பெருமானை வேண்டினுர். விநாயகமூர்த்தி யானை வடிவமாக வந்தார். யானையைக் கண்டவுடன் உயிருக்கு இறுதி வரும்போது உறுதி தருவோன் இறைவன் ஒருவனே என்று உணர்ந்தாள். பந்தபாசம் விலகியது. சிவஞானம் இலகியது. வஞ்சிக் கொடியாகிய வள்ளி அஞ்சி முருக வேளைத் தஞ்சம் புகுந்தாள்.

முருகன் பற்றற்ற வள்ளிநாயகியை மணந்து அருள் புரிந்தார்.

ஆகவே பற்றற்ருர்க்குச் சிவாத்வைதம் என்ற சிறந்த முக்தி நலம் தரும் முதல்வர் கணநாதர். (தொடரும்)



தேச தேசக் கதைகள்
(பிஜித் தீவு)

மந்திர ஆமை



சமோவாவில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவன் பெயர் லெகாம்பை. ஒரு நாள் அவன் மீன் பிடிக்கக் கடலில் சென்ருன். திடீரென்று புயல் உருவாகிப் படகு அலைகடலில் பந்தாடப் பட்டது. எவ்வளவோ முயன்றும் அப் படகைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கடல் நடுவே இருந்த ஒரு பெரிய கறுப்புப் பாறையில் படகு மோதித் தூளாகியது. லெகாம்பை அந்தக் கறுப்புப் பாறையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான். புயல் அடங்கியதும் மெள்ள மெள்ள அப்பாறை மீது ஏறலானுன். என்ன ஆச்சரியம் ! கடல் நடுவே யிருந்த அந்தக் கறும் பாறை நீண்டு நெடிதுயர்ந்த தூண் போல் வானத்தை நோக்கிப் போய்க் கொண்டே யிருந்தது ! லெகாம்பை சளைக்கவில்லை. மேலே ஏறிக்கொண்டே இருந்தான். களைத்துக் கை கால்களெல்லாம் துவண்டுவிட்ட நிலையில், தான் வான மண்டல நகரமொன்றுக்கு வந்திருப்பதை உணர்ந்தான்.

வான் நகர மன்னன் லெகாம்பையின் நிலைக்கு இரங்கி அவனுக்கு உதவ நினைத்தான். ''லெகாம்பை ! நான் உன்னை உன்னுடைய நாட்டுக்கு என்னுடைய கடல் ஆமையின் முதுகில் ஏற்றி அனுப்பி வைக்கிறேன். ஆனுல் நீ இரண்டு விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆமையின் முதுகில் ஏறி அமர்ந்ததும், நீ உன் கண்களை இறுக மூடிக் கொண்டுவிட வேண்டும். என்ன நேர்ந்தாலும் யார் கூப்பிட்டாலும் நீ உன் கண்களைத் திறக்கவே கூடாது. சமோவாவுக்குப் போனதும் என் ஆமைக்கு ஒரு தேங்காயும் தென்னேலையினுல் முடைந்த ஒரு பாயும் கொடுக்க வேண்டும். டோங்கா மக்கள் தென்னை பயிரிடவும், உங்களைப் போல் தென்னம் ஓலைகளால் பாய் முடையவும் கற்றுக் கொள்ளட்டும் என்பதற்காக என் ஆமையை நான் டோங்கா மக்களிடம் அனுப்பப் போகிறேன்'' என்ருன் விண்ணுலக மன்னன்.

லெகாம்பை நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுக் கடல் ஆமையின் முதுகில் ஏறி அமர்ந்ததும் கண்களை இறுக மூடிக் கொண்டான். உடனே கடல் ஆமை வானுலகிலிருந்து கடலுக்குள் பாய்ந்தது. லெகாம்பைக்குத் தான் மூழ்கி விடுவோமோ என்று அச்சமாக இருந்தது. ஆனுலும் கண்களைத் திறக்கவே இல்லை. நீர்மட்டத்துக்கு வந்ததும் ஆமை சமோவாவை நோக்கி வேகமாக முன்னேறலாயிற்று.

''லெகாம்பை! லெகாம்பை! நாங்கள் உன்னைச் சாப்பிட வந்து கொண்டிருக்

கிறோம்'' என்று கத்தின சுறா மீன்கள். லெகாம்பை கண்களைத் திறக்கவில்லை.

''லெகாம்பை! லெகாம்பை!'' என்று காற்று சீறியது. '''நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் ஊதித் தள்ளப் போகிறேன்.'' ம்ஹூம்! அவன் கண்களைத் திறக்கவேயில்லை.

அலைகள் கர்ஜித்தன. ''லெகாம்பை! லெகாம்பை! நாங்கள் உன்னை மூழ்க அடிக்க வந்து கொண்டிருக்கிறோம். பார்!'' ஆனால் அவன் ஆமையைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு கண்களை இன்னும் இறுக மூடிக் கொண்டான்.

சமோவாவுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தான் லெகாம்பை. உயிரோடு வீடு திரும்பியதில் அவனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. தன் மனைவி மக்களைக் காண ஓடினான். தன்னைச் சுமந்து வந்த கடல் ஆமையை மறந்தே போனான்.

இரண்டு நாட்கள் கழித்து ஆமையின் நினைவு வந்தது லெகாம்பைக்கு. பதறிப் போனான். கடற்கரைக்கு ஓடினான். ஆனால் அங்கே அது இறந்து கிடந்தது. அவன் நண்பர்கள் அதைக் கொன்று விட்டார்கள். அது மட்டும் அல்ல. அவர்கள் அதை உணவுக்காகச் சமைக்கவும் முற்பட்டிருந்தனர். நல்ல வேளை! லெகாம்பை அப்போதாவது அங்கே வந்தானே!

''ஐயோ! விண்ணுலக மன்னனுக்குக்கொடுத்த வாக்கைக் காப்பாற்றாதவனாகிவிட்டேனே. தேங்காயை இனி எப்படி அவருக்கு அனுப்புவது? என்னுடைய கெட்ட காலம்தான் இது. இதனால் என்ன இன்னல்கள் நேரிடப் போகின்றனவோ?'' என்று பிரலாபித்தபடி நண்பர்களின் உதவியால் கடற்கரையில் ஒரு பெரிய குழியைத் தோண்டினான். வெகு வெகு ஆழமான குழி. ஆறு நாட்கள் ஆயின, அதன் அடிப் பாகத்தை அடைய. அத்தனை ஆழமான குழியில் அந்தத் தெய்விகக் கடல் ஆமையைப் புதைத்தான். அத்துடன் ஒரு தேங்காயையும் தென்னம் ஓலைப் பாயையும் மறக்காமல் வைத்துப் புதைத்தான். மண்ணைப் போட்டு மூடி அந்த இடத்துக்குத் தன் கடைசி மகன் லவாய்பானியைக் கல்லறைக் காவலாளியாகவும் நியமித்தான்.

பல நூறு ஆண்டுகள் ஆயின. தெய்விக ஆமையைப் பற்றியும் அதன் கல்லறையைப் பற்றியும் எல்லாரும் மறந்து போனார்கள். வயதான பெண்மணிகள் தங்கள் பேரன் பேத்திகளுக்குக் கதையாகச் சொல்லும் விஷயமாயிற்று அது. ஆனால் அந்த மந்திர ஆமையின் கல்லறைக் காவலாளியான லவாய்பானியோ அப்படியே முதுமையடையாமல் பையனாகவே இருந்தான். அவனுக்கு அந்த ஆமையைப் பற்றிய எல்லா விஷயங்களும் தெரியும். ஆனால் அவன் யாருடனும் எதுவும் பேசுவதில்லை. அவனை ஊமை என்றே எல்லோரும் நினைத்து வந்தார்கள்.

அந்த நாள் வந்தது. விண்ணுலக மன்னன் டோங்கா மக்களைப் பார்த்துச் சொன்னான்: ''உங்கள் போர்ப் படகுகளைச் சமோவாவுக்கு அனுப்புங்கள். மந்திர சக்தி வாய்ந்த ஆமையின் ஓட்டை அவர்களிடமிருந்து பறித்து வாருங்கள். அதிலிருந்து இது வரையில் யாருமே கண்டிராத வகையில் மீன் பிடிக்கத் தூண்டில்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.''

விண்ணுலக மன்னனின் கட்டளைப்படி டோங்கா மக்கள் தங்கள் போர்ப் படகுகளைக் கடலில் பல நாட்கள் செலுத்தி ஒரு நாள் சமோவாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

''மந்திர ஆமையின் ஓட்டை எங்களிடம் ஒப்படையுங்கள்'' என்று கேட்டார்கள் டோங்காக்கள். சமோவா மக்கள் சிரித்தார்கள். ''மந்திர ஆமையாவது, ஓடாவது? அது ஒரு கட்டுக் கதையல்லவா? அதன் கல்லறை எங்கே இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது'' என்றார்கள்.

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். கடல் ஆமை ஓட்டைத் தராவிட்



டால் உங்களைக் கொன்று குவிப்போம்'' என்றார்கள் டோங்காக்கள். அப்போது லவாய் பானி அவர்கள் முன்னால் தோன்றினான். ''கடல் ஆமைக் கல்லறையின் காவலாளி நான்தான். இங்கே தோண்டுங்கள். அதை அடக்கம் செய்ததைக் கண்டவன் நான்''என்றான்.

டோங்காக்களுக்குச் சிரிப்பு வந்தது. ''சமோவாக்களில் தலை நரைத்த கிழவர்களுக்குக்கூடத் தெரியாது மறந்துவிட்ட ஒரு விஷயம் ஒரு சின்னப் பையனுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?'' என்று எண்ணினார்கள். ஆனால் சமோவாக்களோ இத்தனை நாட்களும் ஊமை என்று எண்ணிய பையன் பேசியதைக் கண்டு பிரமித்தார்கள். அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் தோண்டினார்கள். தோண்டிக் கொண்டே போனார்கள். ஆறுவது நாள் ஆமையின் ஓட்டைக் கண்டார்கள். டோங்காக்களின் படையெடுப்பிலிருந்து சமோவாக்கள் தப்பினார்கள். டோங்காக்கள் கடல் ஆமை ஓட்டுடன் தங்கள் படகுகளில் ஏறிப் பிரயாணப்பட்டார்கள்.

கடல் பிரயாணத்தின் நடுவில் அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ''தன் கல்லறையைக் காத்து வந்த ஒரு சமோவாப் பையனைப் பல நூறு ஆண்டுகளாக இளமை மாறாமல் வைத்திருக்கக்கூடிய சக்தி ஓர் ஆமை ஓட்டுக்கு இருக்குமானால் அது சாதாரணமான ஓடு அல்ல. மந்திர சக்தி வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். நாம் இதை டோங்காவுக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டாம். கடல் காற்று நம்மை எங்கு கொண்டு போகிறதோ, அங்கு போவோம். இந்த மந்திரக் கடல் ஆமையின் ஓடு நம்மை அபாயங்களிலிருந்து காப்பாற்றும்.''

அதன்படியே அவர்கள் தங்கள் தாய்நாடு திரும்பாமல் கடலில் போய்க் கொண்டேயிருந்தார்கள். விண்ணுலக மன்னனும் காற்றை வீசி அந்தப் படகுகளைச் செலுத்திக் கொண்டு போனான். முடிவாக அவர்கள் ஒரு புதிய தீவை அடைந்தார்கள். அது அழகாகவும் வளப்பம் மிக்கதாகவும் இருந்தது. சமோவாவிலிருந்து அந்த ஆமை டோங்காவுக்கு உயிருடன் வந்திருந்தால் 'அங்கு எப்படித் தென்னைகள் செழிப்பாக வளர்ந்திருக்குமோ, அதே மாதிரி இப்புதிய தீவிலும் தென்னைகள் செழித்து வளர்ந்தன. இதுவே இன்றைய பிஜித் தீவுகள். முதன் முதலில் பிஜித் தீவு வாசிகள் அங்கு குடியேறியது இப்படித்தான். ஆமை ஓட்டை அவர்கள் தெய்வமாக வணங்குவதன் காரணமும் இதுதான்.


கையிலே வென்றது சுகம்...



தோளிலே மிதக்குது காவடி



புகைப்படங்கள்: நடராஜலிங்கம்


"இரண்டு பேருக்கு எதிரில் இருமல் வந்தால் வாயைக் கையால் மூடிக்கொண்டு இருமுவதுதான் மரியாதை. நான் இருமும் போது இப்படித்தான் செய்வேன், இப்போது தெரிந்ததா?"
"அடடா! உங்கள் பல் செட் கீழே விழுந்து விடாமல் இருப்பதற்குத்தான் அப்படி மூடிக் கொள்கிறீர்கள் என்றல்லவா நான் நினைத்தேன்!"
"மிருகக்காட்சி சாலைக்கு அழைத்துப் போகிறேன், எல்லோரும் கிளம்புங்கள்!"
"நான் வரவில்லை சார்!"
"ஏன்டா?"
"இப்போது உற்சாகமாக அழைத்துப் போவீர்கள். நாளைக்கு அதைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொல்வீர்கள்!"
"என் அருமைச் சிறுவர்களே! வாங்கிக் கொள்வதை விடக் கொடுப்பதே உங்கள் வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும்."
"எங்கப்பாவுக்கு அதுவே தொழிலாகப் போச்சு!"
"உன் அப்பா என்ன தொழில் செய்கிறார்?"
"குஸ்தி பயில்வான்!"
சிரிக்கச் சிரிக்க..!
சாமா
தன் மூக்கே தனக்குதவி!
'அம்மா! நான் பரீட்சையில் போட்ட கணக்கிலே ஒரு கணக்கு தப்பாகி விட்டது!'
'அட கண்ணு! மிச்ச கணக்கெல்லாம் சரிட்டா போட்டாயா?'
'இல்லை அம்மா நான் போட்டது ஒரே கணக்குத்தான்!'



வேதாளத்தின் மோதிரம்

வாண்டு மாமா



வெகு காலத்துக்கு முன்னாலே இமயமலைச் சாரலில் சுந்தரவனம் என்றொரு ராஜ்யம் இருந்தது. அந்தச் சுந்தர வனத்தை அடுத்த கானகத்திலே கொடிய ராட்சத மிருகம் ஒன்று வசித்து வந்தது. பிரும்மாண்டமான எருதின் உடல், தவளையின் கால்கள், பாம்பின் வால், இப்படியாகக் காட்சி யளித்தது அந்த அரக்க மிருகம். அதன் வால் அறுபதடி நீளம் இருந்தது. தவளையைப் போல் தாவித் தாவிப் பாய்ந்தது. ஒரு தாவலுக்கு அரை மைல் தூரத்தைக் கடக்கும் ஆற்றல் மிக்கதாக இருந்தது. ஆனால் அது அடிக்கடி தாவுவதில்லை. ஓர் இடத்தில் பல ஆண்டுகள் தங்கி இருக்கும். அது வாயைத் திறந்தால் அதன் பார்வையில் படும் எந்த ஜீவராசியும் அதன் அகலத் திறந்த வாயினுள் அநாயாசமாக வந்து அடக்கமாகி விடும். அப்படிக் கவர்ந்து இழுக்கும் ஆற்றலும் அந்த அரக்க மிருகத்துக்கு இருந்தது.

சுந்தரவனத்தையும் அதை ஒட்டிய பல நாடுகளையும் அம்மிருகம் கலங்க வைத்துக் கொண்டிருந்தது. அதன் அகோரப் பசிக்கும் ஆகர்ஷண சக்திக்கும் இரையானவர்களும், கால்நடைகளும் ஏராளம். அந்த மிருகத்தை யாராலும் கொல்ல முடியவில்லை. அதன் தோலின் செதில்கள் இரும்பையும் கல்லையும் விட உறுதியாக இருந்தன. நெருப்பினால்கூட அதைத் துன்புறுத்த முடியவில்லை. ஒவ்வொரு மன்னரும் யார் அந்த மிருகத்தைக் கொல்லுகிறார்களோ, அவர்களுக்குத் தம் மகளையும் நாட்டில் பாதியையும் தருவதாகப் பறைசாற்றி இருந்தார்கள். வீரர்கள் பலரும் இளவரசர்கள் சிலரும் அம்மிருகத்தைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டு அதற்கு உணவானார்கள்.

இமயமலைச் சாரலில் இருந்த நாட்டு மக்களெல்லாம் அந்த மிருகத்தின் கொடுமையினால் குழம்பிப் போய் நிம்மதி இழந்தார்கள். வயதில் மூத்தவர்களும் அறிவாளிகளும் 'புகழ்பெற்ற மன்னன் விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் வழங்கிய மோதிரம் ஒன்றினால்தான் இதைக் கொல்ல முடியும். ஆனால் அந்த மோதிரம் எங்கே இருக்கிறதென்று யாருக்கும் தெரியாதே!' என்று பெருமூச்செறிந்தார்கள். அந்தப் புகழ்பெற்ற மந்திர மோதிரத்தைப் பற்றிய கதைகளைத்தான் மக்கள் கேட்டிருந்தனர். கண்ணால் பார்த்ததில்லை.

அந்த மோதிரத்தைப் பற்றிய அதிசயமான கதைகளைக் கேள்விப்பட்டு வியந்த ஒரு வீர இளைஞன் ''எப்படியாவது அதைத் தேடிக் கொண்டு வர வேண்டும்'' என்று முடிவு செய்தான். நல்ல மனம் படைத்தவன் அவன். உபகாரியும்கூட. அதோடு அதிர்ஷ்டசாலி. மோதிரத்தைத் தேடிக் கிளம்பிய அவ்வாலிபன் மலைக் குகையில் ஒரு யோகியைச் சந்தித்தான். தவ யோகியான அவரை வணங்கி ஆசி வேண்டினான். அவருக்குச் சோமநாதனைப் — வாலிபனின் பெயர் அதுதான் — பிடித்து விட்டது. ''நீ மேற்கொண்டுள்ள நல்ல காரியத்துக்கு உதவியாக நான் உனக்குப் பறவைகளின் மொழியைக் கற்றுத் தருகிறேன். எந்தப் பறவைகளின் பேச்சையும் நீ புரிந்து கொள்ளலாம்'' என்று கூறி அவனுக்குப் பறவைகளின் மொழியைக்



கற்றுக் கொடுத்தார். பிறகு "மகனே இதற்காக நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நீ விக்கிரமாதித்தனின் மோதிரத்தைக் கண்டுபிடித்தாயானால் அதை என்னிடம் கொண்டு வா. அதில் எத்தனையோ மந்திர தந்திரங்களுக்கான ரகசியங்கள் எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். உன்னால் அதைப் படிக்க முடியாது. எனக்கு அந்த மொழி தெரியும். ஆகவே அதிலுள்ள ரகசியங்களை நீ என் உதவியினால்தான் அறிய முடியும். மறக்காமல் கொண்டுவா" என்று ஆசி கூறி அனுப்பி வைத்தார்.

சோமு தன் முடிவற்ற நிச்சயமில்லாத பிரயாணத்தைத் தொடர்ந்தான். முன்போல இப்போது அவனைத் தனிமை அதிகம் பாதிக்கவில்லை. காரணம், பறவைகளின் பாஷை தெரிந்து விட்டதால் கானகத்தில் அவைகளின் சம்பாஷணைகளைக் கேட்டு மகிழ்ந்தபடியே வழி நடந்தான். பறவைகளின் பேச்சிலே அவன் எத்தனையோ அற்புதங்களையும் அதிசயங்களையும் அறியலானான்.

நாட்கள் போய்க் கொண்டிருந்தன. மந்திர மோதிரத்தைப் பற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லை. 'எங்கே இருக்கிறதோ, இன்னும் எத்தனை காலமாகுமோ?' நம்பிக்கை இழந்த சோமு ஒரு நாள் களைத்துப் போய் ஒரு மரத்தடியில் கண் மூடிப் படுத்திருந்தான். ஆனால் தூக்கம் வரவில்லை. அப்போது அவனுக்கு மேலேயிருந்த கிளையில் இரு அழகிய பறவைகள் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தன. கீழே படுத்திருப்பவன் தன் மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவன் என்ற உண்மை அவைகளுக்குத் தெரியாது.

"இந்த மரத்தடியில் படுத்திருக்கிறானே ஒரு முட்டாள்! அவன் எதைத் தேடி இப்படி அலைகிறான் தெரியுமா?" என்று கேட்டது ஆண் பறவை.

"எதைத் தேடி?" என்று கேட்டது பெண் பறவை.

"விக்கிரமாதித்த மன்னனுக்கு வேதாளம் பரிசளித்த மந்திர மோதிரத்தைத் தேடிக்கொண்டு."


"இவனுக்குக் கிடைக்குமா அது?"

"அது எப்படிக் கிடைக்கும்? மாய மோகினியிடமல்லவா அது இருக்கிறது? அந்த மோகினியை இவனால் நெருங்கவே முடியாதே!"

"உனக்கு அவள் இருப்பிடம் தெரியுமா?"

"அவள் இருப்பிடம் தெரியாது. அவள் பெரிய மாயக்காரி. ஓரிடத்தில் நிலையாக இருக்க மாட்டாள். ஆனால் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் நள்ளிரவில் அவள் ஓர் இடத்துக்கு வருவாள். அதுமட்டும் எனக்குத் தெரியும். இங்கிருந்து மூன்று நாள் பயணத்தில் ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரி நீரில் ஒவ்வொரு முழு நிலவின்போதும் அந்த மோகினி வந்து குளிப்பாள். எதற்காகத் தெரியுமா? அவள் உடலின் இளமை மாறாதிருப்பதற்காக. முழு நிலவில் நள்ளிரவில் அதில் நீராடினால் உடலில் முதுமை தோன்றாதாம். தோல் சுருங்காதாம்."

"அப்படியா ? ஆச்சரியமாக இருக்கிறதே! மூன்று நாள் பயணம்தானே? இன்றைக்கு மூன்றாவது நாள் பௌர்ண



ணமியும்கூட. வாயேன் அவள் குளிக்கும் அழகைக் காணலாம். அப்படியே நாமும் கூட அந்த ஏரி நீரில்...'' என்று தன் சிவந்த முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டது பெண் பறவை.

''ஆசையைப் பாரு! நீயும் இளமை குன்றாதிருக்க ஆசைப்படுகிறாயா?'' என்றது ஆண் பறவை.

''இருக்காதா பின்னே?''

பறவைகளின் சம்பாஷணை முழுவதும் கேட்ட சோமு மகிழ்ந்து போனான். தூங்கினால் பறவைகளைத் தவற விட்டு விடுவோமோ என்று இரவு முழுவதும் விழித்திருந்தபடி அவைகளைக் கண்காணித்து வந்தான். பகலில் அவைகளின் வேகத்துக்கு ஈடு கொடுத்துப் பின்தொடர வேண்டும் என்று அதிகாலையிலேயே அவைகளுடன் கிளம்பத் தயாராகி விட்டான்.

அவைகளுக்குச் சந்தேகம் ஏற்படாதபடி; தற்செயலாக அவைகள் போகும் வழியிலே தானும் போவது போலப் பாசாங்கு செய்தபடி அவ்விரு பறவைகளையும் பின்தொடர்ந்து சென்றான் சோமு. மூன்று நாள் பயணத்தின் முடிவில் பறவைகள் ஒரு மாலையில் ஏரிக்கரைக்கு வந்தன. அடர்ந்த கானகத்தின் மையத்தில் இருந்தது அந்த மந்திர ஏரி. பறவைகள் ஏரிக் கரையிலிருந்த ஒரு மரத்தில் அமர்ந்து கொண்டன. அதே மரத்தின் அடியில் சோமுவும் முடங்கிக் கொண்டு கண் மூடித் தூங்குவது போலிருந்தான்.

பறவைகள் உரையாடலாயின.

''இப்போதுதான் இருட்ட ஆரம்பித்திருக்கிறது. மோகினி ஏரிக்கு வர இன்னும் ரொம்ப நேரமாகும். அது சரி, அவள் இந்த முட்டாள் மனிதனைப் பார்ப்பாளா ?''

''அவள் பார்வையிலிருந்து எதுவுமே தப்பாது. இவன் எத்தனை முட்டாளாக இருந்தாலும் இளைஞனைக் காணப்படுகிறான். ஆகவே நிச்சயம் இவன் அவள் கவனத்தைக் கவருவான். ஆனால் புத்திசாலியானால் அவளுடைய அழகிலோ பேச்சிலோ மயங்காமல் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். அவள்மீது மையல் கொண்டவன்போல் நடித்து, அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் உட்பட வேண்டும். இவன் தன் ரத்தத்தை அவளுக்குக் கொடுக்காத வரை அவளால் இவனுக்கு அபாயம் ஏதும் வராது. ஏமாந்து போய்த் தன்னுடைய ஒரு சொட்டு ரத்தத்தை அவளுக்குக் கொடுத்தானோ தொலைந்தான். இவன் ஆத்மாவை, ஏன், இவனையே அவள் தன் கொடிய சக்திக்கு அடிமையாக்கிக் கொண்டு விடுவாள்.''

''அத்தனை கொடியவளா அந்த மோகினி?''

''சூனியக்காரியாயிற்றே? எத்தனை அழகியோ அத்தனைக்குக் கொடியவள்.''

சோமு ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தான். இரவு வந்தது. முழு நிலவும் கானகத்தின் உச்சிக்கு வந்து ஒளி வீசியது. மரங்களிடையே ஒரு சலசலப்பு எழுந்தது. இருளினூடே ஓர் அழகிய உருவம் மெல்ல நடந்து வருவது நிலவொளியில் நன்றாகத் தெரிந்தது. 'புல் தரையில் அவள் பாதங்கள் பதியவே இல்லையோ? என்ன ஒயிலான நடை?' சோமு மறைந்திருந்தாலும் அவள் மீது வைத்த விழியை எடுக்க முடியவில்லை. இத்தனை அழகான ஒரு பெண்ணை அவன் இதற்கு முன்னால் கண்டதே யில்லை.

மோகினி நேராக மந்திர ஏரிக்குப் போனாள். நிலவொளியிலே வெள்ளிக் குழம்பாகத் தகதகத்துக் கொண்டிருந்தது ஏரி. களங்கமற்ற நீல வானிலே சிரித்துக் கொண்டிருக்கும் நிலவை நிமிர்ந்து நோக்கினாள். பிறகு ஏரி நீரிலே இறங்கினாள், குளிப்பதற்கு. ''சந்திரனே, சந்திரனே! என் இளமையும் அழகும் என்றும் குன்றாமலிருக்க வேண்டும். உனக்குக் கூட அழிவுண்டு. ஆனால் என் அழகுக்கு அழிவு ஏற்படாமல் அருள வேண்டும்'' என்று அவள் வாய் முணுமுணுப்பது அந்த அமைதியில் துல்லியமாகக் கேட்டது. நீராடிவிட்டுக் கரையேறியவள் தன் வெல்வெட்டு போன்ற தலைமுடியைக் கோதியபடியே சோமு மறைந்திருந்த இடத்துக்கு வந்தாள்.

''நான் குளிப்பதை ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த உன்னை நான் தண்டிக்கப் போவதில்லை. மாறாக இதுவரை எந்த மனிதனுமே நுழையாத என் அரண்மனைக்கு உன்னை அழைத்துப் போகப் போகிறேன். பனியினால் சில்லிட்டுப் போன புல் தரையில், தலைக்கு மரத்தின் வேரை உயரமாகக் கொண்டு நீ இக்காட்டில் தூங்குவதை என் மனம் தாங்கவில்லை. கிளம்பு என்னுடன்'' என்றாள் மோகினி. அவளைப் பின்தொடருவதைத் தவிரப் பேசவே நாவெழவில்லை சோமுவுக்கு.

அழகியோடு அவள் அரண்மனைக்குச் சென்ற சோமுவுக்கு அங்கு ஆசார உபசாரங்கள் கிடைத்தன. அற்புதமான அழகுடைய அரண்மனையிலும் பூங்காக்களிலும் மோகினியோடு இன்பமாக வாழ்ந்தான் பல நாட்கள். சுவைமிக்க உணவு, கதகதப்பான பட்டு மெத்தை.

ஒரு நாள் மோகினி சோமுவிடம் கூறினாள்: ''அழகனே! இதுவரை நான் யாரிடமும் என் உள்ளத்தைப் பறி கொடுத்தவளில்லை. உன்னைக் கண்டதுமே என் உறுதி தளர்ந்து விட்டது. நாம் திருமணம் செய்து கொள்வோம். நீ இங்கேயே எந்நாளும் என்னுடன் எவ்விதக் குறைவுமின்றி இன்பமாக வாழலாம்'' என்றாள்.

சோமுவுக்கு அவள் விருப்பம் வெறுப்பைத் தந்தாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், ''இளவரசி! உங்களை மனைவியாகப் பெறுவது என் பாக்கியம். ஆனாலும் எனக்கு இன்னும் சில நாட்கள் அவகாசம் கொடுங்கள். திடீரென்று எனக்குக் கிடைத்த இந்தப் பாக்கியத்தினாலே நான் குழம்பிப் போயிருக்கிறேன் மகிழ்ச்சியால். ஆகவே...'' என்றான் சோமு.

''காத்திருக்கிறேன் கட்டழகரே! நான் உங்களுக்கு இப்பொழுது ஓர் அதிசயமான பொருளைக் காட்டப் போகிறேன், வாருங்கள்'' என்று கூறி அவனை ஓர் அறைக்குள் அழைத்துப் போனாள். அங்கு வெள்ளிப் பீடத்திலே ஒரு தங்கப் பேழை இருந்தது. அதைச் சுட்டிக் காட்டியபடியே, ''இதனுள் உலகிலேயே உன்னதமானதும் யாருக்கும்கிட்டாததுமான விக்கிரமாதித்த மன்னரின் மோதிரம் உள்ளது. என் திருமணப் பரிசாக இதை உங்களுக்குத் தருவேன், நீங்கள் என்னை மணந்து கொண்டால். நீங்களும் நானும் பேதமின்றி ஒன்றாகி விட்டோம் என்பதன் அறிகுறியாக உங்கள் இடது கையின் சுண்டு விரலிலிருந்து மூன்று சொட்டு ரத்தத்தை எனக்கு அளிப்பதன் மூலம் உங்கள் மன உறுதியைக் காட்ட வேண்டும்'' என்றாள் அந்த மாய மோகினி.

சோமுவுக்குப் பறவைகளின் உரையாடல் நினைவுக்கு வந்து, உடலைச் சில்லிடவைத்தது. இருந்தாலும் பயத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், ''அந்த அற்புத மோதிரத்தின் சக்திகளை நான் அறியலாமா?'' என்று கேட்டான் சோமு.

''மனிதர்களுக்கு இதன் பெருமை தெரியாது. எனக்கே கூட இதில் பொறிக்கப்பட்டுள்ள மந்திரங்களைப் பற்றி ஏதும் தெரியாது. ஆனால் இதன் சக்தியைப் பற்றி ஓரளவு எனக்குத் தெரியும். என் இடது கையின் சுண்டு விரலில் இதை அணிந்து கொண்டேனால் பறவைகளைப் போல் வான வெளியிலே பறந்து செல்லுவேன். இடக்கையின் மோதிர விரலில் இம் மோதிரம் இருக்குமானால் நான் யார் கண்களுக்கும் தெரியாமல் மறைந்து போவேன். பாம்பு விரலில் போட்டுக் கொண்டால் நெருப்போ நீரோ, எந்தக் கூரான ஆயுதங்களோ என்னை எதுவும் செய்யாது. ஆள்காட்டி விரலில் அணிந்து கொண்டு எதை நினைத்தாலும் அது நடக்கும். உதாரணமாக இந்தக் கோட்டை அரண்மனையெல்லாம் இதனால் ஆனவைதான். கட்டை விரலிலே இதை மாட்டிக் கொண்டால் போதும். இந்தக் கையினால் ஒரு மலையையே குத்தித் தூளாக்கலாம். அத்தனை பலம் பெற்றவளாகி விடுவேன்'' என்றாள் மோகினி.

''ஒரு சின்ன மோதிரத்துக்கு இத்தனை சக்தியா? என்னால் நம்ப முடியவில்லையே'' என்றான் சோமு.

''நம்பிக்கைப்படவில்லையா?'' என்று கிறீச்சிட்ட அவள் முகம் சிவக்கப்



பெட்டியிலிருந்து மோதிரத்தை எடுத்துக்கொண்டு நிலா முற்றத்துக்குப் போனாள். அவள் கையில் அம்மோதிரம் கோடி சூரியர்களைப் போலக் கண்களைக் கூச வைக்கும் ஒளி சிந்திச் சிரித்தது. பாம்பு விரலில் அதை அணிந்துகொண்டாள். ''எங்கே உங்கள் வாளை உருவி என்னை வெட்டுங்கள் பார்க்கலாம்'' என்றாள்.

சோமு தன் வாளினால் அவளைச் சாடினான். அவளைச் சுற்றிக் கண்ணுக்குத் தெரியாத ஒரு சுவர் எழும்பி இருந்தது. கத்தி வளைந்து ஒடிந்து சிதறியது. மோகினியின் மோதிர விரலுக்கு மோதிரம் மாறியது. அவள் மறைந்து போனாள். ஆனால் அவளுடைய கலகல வென்ற சிரிப்பொலி அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அடுத்த விநாடி அவன் முன் மோகனமாகச் சிரித்துக் கொண்டு நின்ற அவள்,

"இப்போது நம்பிக்கை ஏற்பட்டதா?" என்று கேட்டாள்.

"நம்பிக்கைதான். ஆனால் அம் மோதிரம் உன் கையில் இருப்பதனால் அதற்கு அத்தனை சிறப்போ என்னவோ? நீயே மந்திர தந்திரங்களில் வல்லவள் ஆயிற்றே? என்னைப் போன்ற சாதாரண மனிதனிடம் அதற்கு இத்தனை சிறப்பு இருக்குமா?" என்று கேட்டான் சோமு.


"இதை உங்கள் விரலில் போட்டுக் கொண்டு சோதித்துப் பாருங்களேன்" என்று கூறி மாய மோதிரத்தை அவனிடம் கொடுத்தாள் மோகினி. "இதை உங்கள் இடக்கைக் கட்டை விரலில் அணிந்து இதோ இந்தப் பாறையை அக்கையினால் குத்துங்கள்" என்றாள்.

சோமு அப்படியே செய்தான். பாறைகள் தூள் தூளாகச் சிதறின. "ஆச்சரியம், ஆச்சரியம்! இதேபோல நீ கூறிய எல்லாமே என்னால் சாத்தியமாகுமா? இதன் உதவியால்?" என்று கேட்ட சோமுவிடம் "பரீட்சித்துப் பாருங்களேன்" என்றாள் மோகினி புன்முறுவலுடன், அவன் தன் வசமாகி விடப் போகிறான் என்ற மகிழ்ச்சியில்.

சோமு மோதிரத்தை மோதிர விரலுக்கு மாற்றிக் கொண்டு மறைந்து போனான்.

"இப்போது நீங்கள் என் கண்களுக்குத் தெரியவே யில்லை. அந்த விரலிலிருந்து மோதிரத்தைக் கழற்றினால்தான் நான் உங்களைப் பார்க்க முடியும்" என்றாள் மோகினி. சோமு மறுபடியும் அவள் கண்களில் படும்படி வருவானா? மறைந்த நிலையிலே நிலா முற்றத்தின் மறு கோடிக்குப் போனவன் மோதிரத்தைச் சுண்டு விரலுக்கு மாற்றிக் கொண்டான். பறவையாக மாறி வான வீதியிலே ஜிவ்வென்று கிளம்பினான். கிலிகொண்ட மோகினி, "என் அன்பே! வாருங்கள். உங்களை நான் எத்தனை உள்ளன்போடு நேசித்தால் இந்த உண்மைகளைக் கூறியிருப்பேன். உங்கள் ரத்தத்தில் மூன்று துளிகளைத் தந்து உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள். மோதிரம் உங்களுக்கே உங்களுக்குத்தான். வாருங்களேன்" என்று பதறிக் கதறினாள். ஆனால் சோமு திரும்பியே பார்க்கவில்லை. வெகு வேகமாகப் பறந்து போனான், குகையிலுள்ள தவ யோகியை நோக்கி. பறவைகளின் மொழியை அவர் கற்பித்திருக்காவிடில் சோமுவுக்கு இத்தகைய வெற்றி கிட்டியிருக்குமா? தவ முனிவர் சோமுவின் வரவினால் மகிழ்ச்சி கொண்டார். அந்த அற்புத மோதிரத்தின் உள் பக்கத்திலே செதுக்கப்பட்டிருந்த மந்திரங்களைப் பல நாட்கள் ஆராய்ந்து அவற்றின் பொருளை அறிந்தார். பிறகு மோதிரத்தைச் சோமுவிடமே கொடுத்து ஆசீர்வதித்தார். சுந்தரவனத்தை அடுத்து வாழும் கொடிய அரக்க மிருகத்தை எப்படி மாய்க்க வேண்டும் என்ற வழி வகைகளையும் கூறி அனுப்பினார் துறவி.

சோமு பெரியவரை வணங்கி மோதிரத்தைச் சுண்டு விரலில் அணிந்து கொண்டு சுந்தரவனத்து மன்னரின் முன்னால் போய்க் குதித்தான். "கொடிய மிருகத்தைக் கொன்று வருகிறேன். அதற்கு நான் விரும்பும் சில உபகரணங்களைச் செய்து தர வேண்டும்" என்றான் சோமு.



மன்னர் மகிழ்ச்சியோடு இணங்கினார். "இரும்பினால் ஒரு குதிரை. அதன் கால்களில் சக்கரம் இணைக்க வேண்டும். பன்னிரண்டு அடி நீளத்தில் இரு பக்கமும் கூரான ஓர் ஈட்டி, பெரிய மரத்தைப் போல. அதன் நடுவே பக்கத்துக்கு ஆறு அடிகள் கொண்ட கனமான சங்கிலி இணைத்து அவற்றின் நுனியில் இரு உறுதியான இரும்பு முளைகளையும் பொருத்திக் கொடுங்கள்" என்று கேட்டான் சோமு. எல்லாம் தயாரானதும் சோமு குதிரை மீது ஏறிக் கொண்டு மோதிரத்தின் சக்தியால் அதை இயக்கியபடி கொடிய மிருகத்தைக் குறி பார்த்துப் போனான். அவனைக் கண்ட அவ்வரக்க மிருகம் தன் அகன்ற வாயைத் திறந்தது. காந்தத்தினால் இழுக்கப்படுவதுபோல் இரும்புக் குதிரை சோமுவோடு அதன் பெரிய வாயை நோக்கி ஓடியது வேக



மாக. அவன் வாயருகே போனதும் சோமு தான் தூக்கி வந்த இரும்பு ஈட்டியின் ஒரு முனையை அதன் கீழ்த் தாடையில் பலம் கொண்ட மட்டும் செலுத்தினான். அது அதன் கீழ்த் தாடையைப் பொத்துக் கொண்டு பூமியில் பாய்ந்து குத்திட்டு நின்றது. அதே சமயம் மேல் தாடை வாயை மூடக் கீழே தழையவே மறு முனையில் செருகிக் கொண்டது. சோமு மின்னல் வேகத்தில் கீழே குதித்து ஈட்டியின் இரு பக்கத்துச் சங்கிலிகளையும் இழுத்து அதிலுள்ள முனையைப் பூமியில் பதித்து அழுத்தி அடித்தான். இவைகளைச் செய்ய வேதாளத்தின் மோதிரத்தை விரல்களில் மாற்றி மாற்றி அணிந்து செயல்பட்டான்.

வசமாகச் சிக்கிய மிருகம் மூன்று நாட்கள் வரை தன்னுடைய நீண்ட பாம்பு வாலைத் தரையில் அடித்துக் கொண்டே வலியால் துடித்தது. அதனால் பூகம்பம் ஏற்பட்டது போல் அதிர்ந்தது பத்து மைல் சுற்றளவுக்கு. அதன் வாயினுள் புகுந்த இரும்புக் குதிரையும் இரும்பு உலக்கையும் அது ஆகாரம் எடுக்க விடாமல் செய்தன. அப்படியும் அது சாகவில்லை. முடிவாகச் சோமு மோதிரத்தைத் தன் கட்டை விரலில் அணிந்து கொண்டு அதன் தலையில் ஓங்கி ஒரு குத்து வைத்தான். மலையையே பிளக்கும் பலம் கொண்ட குத்தல்லவா அது? மந்திர மோதிரத்தின் மகிமை மிக்க பலத்தினால் அந்தப் பொல்லாத மிருகம் நசுங்கிச் சிதல் சிதலாகியது.

அதன் பிறகென்ன? எல்லா மன்னர்களும் தங்கள் தங்கள் பெண்களைச் சோமுவுக்கு மணம் முடித்துத் தர முன் வந்தனர். ஆனால் சோமு அழகில் சிறந்த சுந்தரவனத்து மன்னரின் மகள் சுந்தர வதனியை மட்டுமே மணந்து கொண்டான்.



உலகை ஆட்டிப் படைக்கும் எண்ணெய்

மேலே ஆறு படங்களைப் பார்க்கிறீர்கள். அன்றாட வாழ்வில் நீங்கள் காணும் பல்வேறு பொருள்கள்தான் இவை. இவைகளுக்கு எல்லாம் மூலமாக இருப்பது ஒரே பொருள்தான். அது என்ன என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா ?

கொஞ்சம் புத்திசாலிகளானால் நீங்கள் ஊகித்த அந்தப் பொருள் சரிதான். **பெட்ரோலியம்!** பூமிக்கு அடியில் பாறைகளுக்கிடையே ஊற்றாகக் கிடைக்கும் ஒருவித எண்ணெய்தான் இது. இந்தத் தாது எண்ணெய் கண்டு பிடிக்கப்படாவிட்டால் மேலே காணும் பொருள்கள் தோன்றியே யிருக்காது. இன்றைய நாகரிக வாழ்வின் வளர்ச்சிக்கு மூச்சாக இருப்பது இந்த எண்ணெய்தான். அதனால்தான் இன்னமும் உலகில் எந்தப் பாகத்திலும் பெட்ரோலியம் எண்ணெய் கிடைக்கிறதா என்று மனிதன் ஆராய்ந்து கொண்டேயிருக்கிறான்.

பெட்ரோலியம் (தாது எண்ணெய்) என்பது என்ன? ஆழ்ந்த பசுமையும் செம்பழுப்பும் கலந்த ஒரு கெட்டியான திரவம். இது பூமியின் கீழே வெகு ஆழத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. அத்தனை ஆழத்தில் அது எப்படித் தோன்றியது?


பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இன்று நீங்கள் தேசப் படத்தில் காணும் நிலப்பரப்பெல்லாம் அப்போது கடலுக்கு அடியில் இருந்தன. இந்தக் கடலில் அப்போது விநோதமான பிராணிகள் பல வாழ்ந்து வந்தன. இவைகள் இறந்ததும் இவற்றின் உடல் கடலின் அடியில் மூழ்கி அமிழ்ந்தன. நதிகள் கொண்டு வந்து இக்கடலில் கொட்டிய வண்டல் மண்ணினால் இச்சடலங்கள் மூடப்பட்டன. மேலும் மேலும் படிந்த வண்டல்கள் இறுகிப் பாறையாயின. அவைகளுக்கிடையே இச்சடலங்கள் அழுத்தப்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாக இவ்வுடல்கள் எண்ணெயோடு கூடிய சிறு சிறு துகள்களாயின. இத்துகள்கள் பாறைகளின் நடுவே தங்கின. காலப் போக்கில் இந்தப் பாறைகளின் மீது அழுத்தம் அதிகமாகியது. பாறைகளின் இடைவெளி நசுக்கப்பட்டது. அப்போது அங்கிருந்த எண்ணெய்த் துகள்கள் மேல் பரப்பை நோக்கி வெளியேறலாயின.

ஆனால் அநேகமாக இப்படி இந்த எண்ணெய் வெளியேறி வீணாகிப் போக இயற்கை விடுவதில்லை. காப் ராக் (Cap Rock) குல்லாய்ப் பாறை என்ற பகுதி இப்படி எண்ணெய் வெளியேறுவதைத் தடுத்து நிறுத்திவிடும். இந்தக் குல்லாய்ப் பாறைகளில் இடைவெளியே கிடையாது. அத்தனை உறுதியானவை.

அடுத்த பக்கத்தில் கீழுள்ள இரண்டாவது படத்தில் இந்தக் குல்லாய்ப் பாறை வரைபடமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதன் கீழே துவாரங்களையுடைய மணல் பாறை (Sand Stone) கடல் பஞ்சைப்போல் பல அறைகளைக் கொண்டிருப்பதால் அதில் ஏராளமான திரவம் தங்க வசதி உண்டல்லவா ? இந்த மணல் பாறையில் எண்ணெய், தண்ணீர், வாயு மூன்றும் தங்கியிருக்கின்றன. ஆனால் இவை ஒன்றோடொன்று கலப்பதில்லை. ஏனென்றால் எண்ணெயைவிட வாயு இலேசானது. தண்ணீரோ கனமானது.

'வைக்கோல் போரில் ஊசியைப் போட்டுவிட்டுத் தேடுவது போல்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. மனிதன் எண்ணெய் ஊற்றுக்களைத் தேடி அலைவதை இதற்கு ஒப்பிடலாம். அத்தனை சிரமமான காரியம். எண்ணெய் உலகின் எந்தப் பகுதியிலும்—நிலத்தில், கடலுக்கு அடியில், கானகத்தில், பாலை வனத்தில், நகரங்கள் சூழ்ந்த பிரதேசத்தில், பசுமையான வயல்வெளிகளின் அடியிலே — எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம்.

மனிதர்களின் காலடியே படாத இடங்களிலும் தேசப் படங்களில் இடம்




பெருத தீவுகளிலும்கூட எண்ணெய் தேடல் நடைபெறும். விமானங்களில் பறந்தபடி ஏராளமான புகைப்படங்களை எடுப்பார்கள். இந்தப் படங்களை ஒன்று சேர்த்து அமைத்துத் தேசப் படம் தயாரிப்பார்கள். இதற்கு 'ஏரியல் ஸர்வே' என்று பெயர். புதிய இடங்களை எண்ணெய்த் தேடலுக்குத் தேர்ந்தெடுப்பது இப்படித்தான்.

பூமி மட்டத்திலேயோ ஜியாலஜிஸ்ட்— பாறைகளை ஆராய்பவர் — இக்காரியத்தைச் செய்கிறார். பாறைகளைச் செதுக்கி எடுத்து அதில் காணப்படும் 'ஃபாஸில்'களையும் அப்பாறையின் தன்மைகளையும் ஆராய்ந்து அதன் வயதை நிர்ணயம் செய்கிறார் இவர். ஜியாலஜிஸ்டோடு டோபோகிராபரும் (Topographer) இணைந்து செயல்படுவார். இவரது வேலை நிலத்தின் அமைப்பை ஆராய்வது. பாறைகள் எப்படி உருவாகி எத்தகைய அழுத்தத்தினால் அது மடிந்து சரிந்து பிளவு பட்டிருக்கிறது என்றெல்லாம் அதன் ஜாதகத்தைக் கணிக்கக் கூடியவர் இந்த டோபோகிராபர். (கீழ்ப் படம் ஒன்று) இப்படிப் பாறைகளின் அமைப்புக்களை ஆராய்ந்த பிறகு எண்ணெய்க் கம்பெனிகள் தங்களிடமுள்ள திறமை வாய்ந்த நிபுணர் குழுவை நுண்ணிய இயந்திரக் கருவிகளுடன் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கும். இவர்களில் ஒரு குழுவினர் ஸீஸ்மிக் சர்வே (Seismic Survey) செய்வார்கள். பூமியைக் குடைந்து அதில் டைனமைட்டை வெடிக்கச் செய்வார்கள். இதற்குச் சற்றுத் தொலைவில் பல உணர்ச்சிமிக்க காதுகள் பூமியின் மீது பொருத்தப்பட்டிருக்கும். இவைகளுக்கு ஜியோஃபோன்கள் என்று பெயர். (கீழ்ப் படம் 3) டைனமைட் வெடிக்கப்பட்டதும் அதனால் ஏற்படும் அதிர்ச்சி அலைகள் பூமியின் அடியிலுள்ள பாறைகளில் தாக்கித் திரும்பும். இந்த அலைகளை ஜியோ ஃபோன்கள் பதிவு செய்து கொள்ளும் (படம் 4) அதிர்ச்சி அலைகளை ஜியோ ஃபோன் கிரகிக்கும் நேரத்திலிருந்து விஞ்ஞானிகள் பாறை அடுக்குகளின் ஆழத்தைக் கணக்கிடுகிறார்கள்.


பல மாதங்கள் சலியாத உழைப்பும் ஏராளமான பொருளும் செலவிடப்பட்ட பிறகு எண்ணெய் ஆராய்ச்சிக்கான 'டிரயல் போர்' துளை போடப்படும். விசேஷமான யந்திரத்தைக் கொண்டு பூமியில் பரீட்சார்த்தமாகத் துளை போட்டு எண்ணெய்ப் பகுதியைக் கண்டுபிடிப்பதற்கு 'டிரயல் போர்' என்று பெயர். இப்படிச் செய்யப்படும் துளைகளின் ஆழம் சில சமயங்களில் ஐந்து மைல்களுக்கு அதிகமாகக்கூட இருக்கும்.

இத்தனைக்குப் பிறகும்கூட அங்கு எதிர்பார்த்தபடி எண்ணெய் இருக்கும் என்று சொல்ல முடியாது; இல்லாமலும் போகலாம். பத்து இடங்களில் தோண்டி ஆராய்ச்சி செய்தால் ஒன்பது இடங்களில் ஒன்றுமே இல்லாமல் போகும். ஆனால் பத்தாவது இடத்தில் கிடைக்கும் எண்ணெய்ச் செல்வம் இருக்கிறதே, அது ஒன்பது இடங்களில் செலவிடப்பட்ட அத்தனை பொருள்களையும் திரும்பக் கொடுத்து அதற்கு மேல் லாபமும் கிடைக்கும்படி இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இன்று எந்த நாட்டினிடம் எண்ணெய்க் கிணறுகள் உள்ளனவோ, அவை தலைநிமிர்ந்து நிற்கும். அதனிடம் கையேந்தி நிற்க வேண்டும் மற்ற நாடுகள். இன்று குழப்பம் மிகுந்திருக்கும் மத்திய கிழக்கிலுள்ள அரபு நாடுகளிடம் ஏராளமான எண்ணெய்ச் செல்வம் இருப்பதால் படை பலத்தைக் கொண்டு அவைகள் பேரம் பேசவில்லை. தமது எண்ணெய் வளத்தைக் கொண்டே பேரம் பேசுகின்றன. பெட்ரோல் எண்ணெயின் பெருமை அப்படி.











ஷீலா கொடுத்த தகவலின்படி, கரடி வேஷம் இருந்தவனையும், மரத்தோடு கட்டிப் போட்டிருந்தவனையும் இன்ஸ்பெக்டர் கைது செய்து கொண்டு போனார். அவ்விருவரும் பழைய கேடிகள். அவர்களுக்குத் தக்கபடி கவனித்துக் கொண்டது காவல் இலாகா. டைகரைச் சுமந்தபடி ஹெலிகாப்டர் இருக்குமிடத்துக்கு விரைந்து போய் அதன்மூலம் பம்பாய்க்குப் பறந்தார் கங்காராம்......
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
ஷீலாவைக் காணோம்
24
டாக்டர், எப்படியாவது இந்த நாயைப் பிழைக்க வைக்க வேணும்.
விஷம் ரத்தத்துடன் ரொம்பக் கலந்து விட்டது. இருந்தாலும் உடலில் இரும் இதயத் துடிப்பும் இருப்பதால் ஒரு நம்பிக்கை. விசேஷ மருந்துக்கு விமானம் பறந்திருக்கிறது. பார்க்கலாம்.
மாடசாமிக்கும் தகவல் தரப்பட்டது. அவரும் விமானத்தில் வந்து சேர்ந்தார். விசேஷ மருந்தும் வந்தது. அதிசய— —நாயின் உயிரும் அபாய— எல்லையைத் தாண்டியது.
டைகர், ஏண்டா ஏதேதோ அபாரமான வேலையெல்லாம் செஞ்சியாமே. இப்போ உடம்பு எப்படிடா இருக்கு
விஷத்துக்கு முறிவு கொடுத்துப் பொழைக்-க வைச்சுட்டாங்க மாமா.
மெள்ள மெள்ள டைகரின் உடல் தேறியது. பலவீனமாக இருந்தாலும் பெட்டிக் கூடைக்குள் எழுந்து உட்கார்ந்து ஷீலாவின் கையால் உணவு உட்கொண்டது.


ஆனாலும் அதன் பின்னங்கால்கள் சுவாதீனமிழந்து விட்டன.
மாமா, என் டைகரால் நடக்க முடியலியே. என்ன செய்வேன்?
நாளா வட்டத்தில் இதன் கால்கள் சரியாகி விடும். அதுவரை அதன் நிலை பரிதாபகரமானதுதான்.
கால் இழந்த மனிதர்களுக்கு ஊன்றுகோல் உதவுவது போல இதற்கும் இப்படிச் செய்யலாமென்று கூறினார்கள். உடனே ஏற்பாடு செய்து விட்டேன்.
ஏகமாகச் செலவாகி இருக்குமே?
என்ன செலவானால் என்ன? டைகரினால் இப்படியாவது ஓட முடிகிறதே. இதைக் கண்டு ஷீலா எப்படி மகிழ்ந்து போகிறாள்.
சக்கரவண்டியோடு டைகர், மாடசாமி, ஷீலாவும் வரும், விமானமூலம் ஊட்டிக்குக் கிளம்பினார்கள். ஷீலா தன் படிப்பை அதே கான்வென்டில் தொடர முடிவு செய்கிறார் கங்காராம்...
மாடசாமியின் வீட்டு வேலியோரத்தில் ஷீலாவின் வரவை எதிர்பார்த்து டைகர் தினம் காத்திருக்கும். மாலையில் அதைச் சந்தித்து விட்டுத் திரும்ப விசேஷ அனுமதி அளிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார் கங்காராம்.
ஒரு நாள் வழக்கம் போல வரவேண்டிய ஷீலா வரவில்லை. காத்துக் கிடந்த டைகருக்குக் கண் பூத்துப் போயிற்று.


ஷீலாவுக்கு மறுநாள் பரீட்சை. படிக்க நிறையப் பாடங்கள் இருந்ததால் அவள் அன்று வரவில்லை. அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று. தன் கால்களைப் பயன் படுத்தி ஓடுவதற்கான உத்தேசமும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டது இதனால் தானே! ஷீலாவின் ஹாஸ்டல் அறைக்குப் போய்த் தன் கால்களால் பிராண்டித் தட்டி அழைத்தது தன் தோழியை டைகர்.......
சட்டென்று சக்கர வண்டியோடு பிணைத்திருந்த தன் கட்டை அவிழ்த்துக் கொண்டது.....
அடுத்த விநாடி வேலியைத் தாண்டிக் குதித்தது, ஷீலாவின் கான்வென்டை நோக்கிப் போக. என்ன ஆச்சரியம்! அதன் பின்னங்கால்கள் தரையில் ஊன்றிச் செயல் பட்டன. டாக்டர் சொன்னபடி கொஞ்சங் கொஞ்சமாக அதன் கால்களில் ரத்த ஓட்டம் ஏற்பட்டுக் கூடி விட்டன. ஊனமான கால் நேராகி விட்டது.......
சக்கர வண்டி இல்லாது வந்த டைகரைக் கண்ட ஷீலாவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி, வியப்பான வியப்பு! இந்த அதிசயத்தைச் சொல்ல டைகர் பின் தொடர மாடசாமியிடம் ஓடி வந்தாள் ஷீலா. தன் அருமை டைகரின் கால்கள் நேரானதைக் கண்டு மாடசாமிக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. ஏன் உங்களுக்கும் கூடத்தான் இல்லையா? இப்பொதெல்லாம் ஷீலா வராவிட்டால், டைகரே நடுவகுப்பிலே கூட அவளைத் தேடிப் போய் விடுகிறது. அதற்கு எங்கும் யாரும் எவ்விதத் தடையும் விதிப்பதில்லை. டைகரும் ஷீலாவும் சந்தோஷமாக இருக்கட்டும். நாம் அவர்களிடமிருந்து விடை பெறுவோம்!

சுபம்..

பட்டணம் சென்ற குரங்கு!

அழகு பழனிச்சாமி

குரங்கு ஒன்று பட்ட ணத்தில்
வாழ நினைத்ததாம்! — அது
குபீர் என்றே ஓடும் ரயிலில்
தொத்திக் கொண்டதாம்!

இரண்டு மணியில் சென்னை நகரம்
சென்று விட்டதாம்! — எங்கு
போவ தென்றே தெரியாமல்
திகைத்து நின்றதாம்!

நீண்டு பரந்த சென்னை முழுதும்
சுற்றிப் பார்த்ததாம்! — அங்கே
நிமிர்ந்து நிற்கும் கட்ட டங்கள்
கண்டு வியந்ததாம்!

தாண்டித் தாண்டி நகரையெல்லாம்
சுற்றி வந்ததாம்! — அதற்குத்
தாகம் வரவே தண்ணீர் தேடித்
தவித்து நின்றதாம்!

கூவம் என்ற நதியின் நீரைக்
குடிக்கப் போனதாம்! — அதன்
குடலைப் புரட்டும் நாற்றம் ஏனோ
புடிக்க வில்லையாம்!


கோபத்தோடு இடத்தை விட்டுக்
குதித்து நின்றதாம்! — உடனே
குறுக்கே செல்லும் ரயில்பா லத்தைக்
கடக்க நினைத்ததாம்!

தண்ட வாளம் குறுக்கே வாலும்
மாட்டிக் கிட்டதாம்! — விரைந்து
செல்லும் ரயிலின் சக்க ரந்தான்
வெட்டி விட்டதாம்!

துண்டாய்ப் போன வாலைப் பார்த்துத்
துடித்து விட்டதாம் — அது
துயரம் தாங்க முடியா மல்தான்
கண்ணீர் விட்டதாம்!

'சென்னை வாசம் போது' மென்றே
வெறுப்பு அடைந்ததாம்! — அது
சொல்லா மல்தான் வந்த வழியே
திரும்பி விட்டதாம்!

சென்னை சென்று வாலை இழந்து
வந்து சேர்ந்ததாம்! — அதைச்
சேர்ந்த குரங்குக் கூட்ட மெல்லாம்
கேலி செய்ததாம்!





வீரத்தின் விளைநிலம் ராஜஸ்தானம். சாகஸங்கள் புரிவதில் சமர்த்தர்கள் ராஜபுத்திரர்கள். தன்மானங் காக்கத் தன்னுயிரையே தரக்கூடிய ஒப்பற்ற வீரர்கள். மாவீரன் ராணா சாங்காவின் மகன் உதயசிம்மன் உதவாக்கரையாக விளங்கினான். கேளிக்கைப் பிரியனாக வாழ்ந்தான். ராஜபுத்திர குலத்துக்கே ஓர் இழுக்காக வந்தவன் உதயன்.

உதயசிம்மனின் ஆட்சியிலே மேவாரின் பல பகுதிகள் அக்பரின் ஆதிக்கத்துக்குள்ளாயின. வீரமற்ற மன்னன் வீணன் என்று மக்கள் அவனை வெறுத்தார்கள்.

ஒரு சமயம் அக்பரின் முற்றுகையிலிருந்து சித்தூரைக் காக்க முடியாத கோழை மன்னன் உதயன், தன் பெண்டு பிள்ளைகளுடன் பத்திரமான இடத்துக்குத் தப்பியோடி விட்டான்; நாட்டைக் காக்கும் பொறுப்பை இரண்டு சின்னஞ் சிறுவர்களிடம் ஒப்படைத்து விட்டு. அவ்விருவருக்கும் அப்போது வயது என்ன தெரியுமா? பதினாறும், பதினேழும்தான். அவர்களில் ஒருவன் பெயர் ஜெய்மல், மற்றவன் பெயர் புட்டா என்பதாகும்.

வீரர் கதை

ஜெய்மல்லும் புட்டாவும்



'கௌசிகன்'

ராஜபுத்திரர்களின் போற்றுதலுக்கும் வணக்கத்துக்கும் உரிய சித்தூரை-வீரத்துக்குப் பிறப்பிடமான சித்தூரைக் காக்கும் கடமை இரு சிறுவர்களுக்குக் கிடைத்தது. இத்தனை சின்னப் பையன்களிடம் ஒரு நகரைக் காக்கும் பொறுப்பை ஒப்புவிப்பார்களா என்று நீங்கள் கேட்கலாம். ராஜபுத்திரர்களின் புனிதமான தலைநகரைக் காக்கும் உரிமை ராஜ குலத்தில் உதித்தவர்களுக்குத்தான் உண்டு. மேவாரில் பதினாறு இனத்தவர்களை மிக உயர்ந்த குடிப் பிறப்புடையோராகக் கருதுவார்கள். அத்தகைய உயர் குடியில் வந்தவர்கள்தான் ஜய்மல்லும் புட்டாவும். இவ்விருவருடைய தந்தையரும் சித்தூரைக் காக்கும் பணியில் போர்க் களத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள்.

குடிமக்களைப் பேணிக் காக்காத, தாய் நாட்டின் பெருமையைக் காக்க அந்நியனோடு போராடச் சக்தியற்ற மன்னன் ஊரை விட்டு ஓடியதற்காக மக்கள் மகிழ்ச்சியே அடைந்தார்கள். 'தாய்நாட்டை அந்நியனுக்கு அடிமையாக விடமாட்டோம். எப்படியும் எத்தனை உயிர்களைப் பலி கொடுத்தாலும் அதைக் காப்போம்' என்று சபதம் மேற்கொண்டார்கள் வீர ராஜபுத்திரர்.

புட்டாவின் தாய் தன் மகனுக்குக் காவியுடை அணிவித்துப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தாள். துறவிகள் அணியும் காவியுடை அல்ல இது. ராஜபுத்திர வீரர்கள் உடுக்கும் ஆரஞ்சு வண்ண ஆடை இது. இந்த ஆடை அணிந்தால் ஒன்று வெற்றி அல்லது வீர மரணம். தம் மகனைப் போர்க் களத்துக்கு



அனுப்பிய அந்தத் தாய், சித்தூரின் வீர ராஜபுத்திர மங்கையர்களை ஒன்று சேர்த்தாள். ''மன்னன் நகரின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை நம்மிடம் விட்டு விட்டு ஓடிவிட்டான். வீர ராஜபுத்திரர் நகரைக் காக்க உறுதி பூண்டு போர்க்களம் புகுந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவது நமது கடமை. தலைநகர் மாற்றான் வசப்பட்டால் கௌரவமான முறையில் தீக்குளித்து உயிர் துறப்பதற்குத் தீமூட்டக் கூட நமக்கு நேரம்இருக்காது. அன்னியனின் அடிமைகளாகி விடுவோம். அந்த இழி நிலைக்கு இலக்காக விருப்பமில்லாதவர்கள் என்னுடன் போர்க் களத்துக்குக் கிளம்புங்கள். உயிரின் மீது ஆசை உள்ளோர் இங்கேயே இருக்கலாம்'' என்றாள். ராஜபுத்திர நாரீமணிகள் அத்தனை பேரும் கையில் ஆயுதமேந்திப் புட்டாவுடைய அன்னையின் ஆணையை ஏற்று அவளைப் பின்தொடர்ந்தனர். அன்றையப் போரில் பல வீரர்களின் தாய்மாரும் மனைவிமாரும் தங்கள் வீரம் காட்டி விண்ணுலகம் எய்தினார்கள். மாதர்களின் வீரம் கண்ட கோழையும் வாள் எடுத்துக் கிளம்பினான் போர்க் களத்துக்கு. இதுவரையில் காணாத வகையில் சித்தூர் ரத்தினங்கள் போரிட்டன. 'ராஜபுத்திரர்கள் மரணத்தை விரும்புகிறவர்கள்' என்று அந்நியர் வியந்து போற்றும் வகையில் இருந்தது அந்தப் போர்.

புட்டாவின் அன்னையும் மனைவியும் கையில் வாளேந்தி விரோதியை வீழ்த்த முற்பட்டு வீழ்ந்த பின் புட்டாவின் வீரம் பன்மடங்காயிற்று. வாளைச் சுழற்றினான். பல தலைகள் உருண்டு வீழ்ந்தன. வெற்றி முகம் காணும்போது விரோதிகள் அவனை வீழ்த்தி விட்டனர். புட்டாவின் இடத்தில் உடனே ஓடி வந்து நின்றான் ஜய்மல். ராஜபுத்திர வீரர்கள் புதிய வேகம் கொண்டு போரிட்டார்கள். அன்றையப் போர் ஜய்மல்லுக்கு வெற்றியாகவே முடிந்திருக்க வேண்டும். ஆனால் பாரதத்தின் விதி வேறு விதமாக இருக்கும்போது, வெற்றி எப்படிக் கிட்டும்? அக்பரின் பக்கமே அதிர்ஷ்ட லக்ஷ்மி இருந்தாள். அக்பரின் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ஒரு குண்டு ஜய்மல்லின் உயிரைக் குடித்துப் பசி அடங்கியது. ஜய்மல்லின் இடத்தை ஏற்றுப் போரை நடத்த வேறு யாரும் இல்லை. இரு கண்கள் போன்ற இரு ராஜபுத்திர ரத்தினங்களை இழந்த சித்தூர் வீரர்கள் நிலை குலைந்து போனார்கள். இறந்த வீரர்களின் சிவப்பு உடைகள் நடைபாவாடையாக அமைய அதன் மீது நடந்து சித்தூரினுள் புகுந்தார் அக்பர்.

ஆனால் அக்பரும் ஒரு மாவீரன் அல்லவா? அந்தப் போரிலே ஜய்மல்லும் புட்டாவும் காட்டிய வீரத்தை அவரால் மறக்கவே முடியவில்லை. 'பதினாறே வயதான இளைஞர்களான அவர்கள் எத்தகைய சாகஸம் புரிந்தார்கள்? இத்தகைய இளைஞர்களைக் கொண்ட பாரதத்தை நாம் என்றைக்கு நம் வசப்படுத்திக்கொள்ளப் போகிறோம்?' என்று மலைக்கலானார் அவர். ஜய்மல், புட்டா என்ற அந்த இளஞ் சிங்கங்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்படி செய்ய நினைத்தார். தில்லியில் உள்ள தன் அரண்மனை வாசலின் இரு பக்கங்களிலும் இரண்டு யானைகளின் மீது அவ்விரு வீர வாலிபர்களும் அமர்ந்திருப்பது போன்று சிலை வடித்து நிறுவினார். ஒவ்வொரு தடவையும் தாம் அரண்மனைக்குள் போகும்போதும் அங்கிருந்து வெளியே வரும்போதும் அந்த வீர வாலிபர்களைக் கண்டு மகிழ்வதற்காகவே அப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்தார் அக்பர்.



இன்று உலகின் கவனமெல்லாம் ஒரே இடத்தில் திரும்பியிருக்கிறது. அது எந்த இடம் தெரியுமா ? மேற்கு ஆசியாவிலுள்ள **சூயஸ் கால்வாய்** பகுதி தான் அது. மேற்கு ஆசியப் பிரச்னையில் முக்கிய பங்கு வகிப்பவை சூயஸ் கால்வாயும் பெட்ரோல் எண்ணெயும் தான். சூயஸ் கால்வாய் இயற்கையாக் ஏற்பட்டதா ? இல்லை. மனிதனின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு இந்தக் கால்வாய். இரு கடல்களை ஒன்றோடொன்று இணைப்பதற்கு (செங்கடலையும், மத்திய தரைக் கடலையும்) கால்வாய் வெட்டி மகத்தான சாதனை புரிந்தவர் ஒரு பிரஞ்சுக்காரர்.

1498ல் கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் கிழக்குக் கடலுக்குப் போகப் புதிய கடல் மார்க்கம் காண முயன்றார். அதே சமயத்தில் போர்த்துகீசிய மாலுமியான வாஸ்கோ ட காமா லிஸ்பனிலிருந்து கிளம்பி ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியா வந்தடைந்ததையெல்லாம் நீங்கள் படித்திருப்பீர்கள். வாசனைத் திரவியங்களைத் தேடி வந்த




வர்த்தகர்களுக்கு இது ரொம்பச் சுற்று வழியாகவும் அயர்வையும் அபாயங்களையும் தருவதாகவும் இருந்தது. ஆனால் வேறு வழியே இல்லையே. 1869ல் சூயஸ் கால்வாய் திறக்கப்படும் வரை கப்பல்கள் ஆப்பிரிக்காவைப் பிரதட்சிணம் செய்து கொண்டுதான் இந்தியாவுக்கு வந்தன.

கி. மு. ஆறும் நூற்றாண்டிலிருந்தே எகிப்தில் கால்வாய்கள் உண்டு. டேரியஸ் மன்னர் நைல் நதியிலிருந்து செங்கடலுக்குக் கால்வாய் வெட்டியிருக்கிறார். இதன் பிறகு 1300 வருடங்களில் இக் கால்வாய் அடிக்கடி மண் மூடிப் போக அதைச் சுத்தப்படுத்தி வந்திருக்கிறார்கள். இந்தக் காலத்தில் இரு கடல்களையும் இணைக்கும் எண்ணம் எழுந்ததுண்டு. ஆனால் மத்திய தரைக் கடலை விடச் செங்கடல் 33 அடிகள் உயரமானது. ஆகவே இவ்விரண்டு கடல்களையும் இணைப்பது கடினம் என்று கருதினார்கள். கடல் நீரைப் பல கட்டங்களில் தேக்கி; இரு கடல்களின் ஏற்றத் தாழ்வைச் சரிப்படுத்தி ; ஒரு மட்டத்திலிருந்து இன்னொரு மட்டத்துக்குக் கப்பல்களைச் செலுத்தும் வழி வகை பற்றி அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இப்படி ஒரு கால்வாயை வெட்டினால் கடல் பிரயாணத்தில் பல்லாயிரம் மைல்களை மிச்சப்படுத்தலாம் என்ற கருத்துப் பலருடைய எண்ணத்தில் இருந்தாலும் அதைச் செயல்படுத்தியவர் **ஃபெர்டினண்டு டி லெஸெப்ஸ்** என்ற பிரஞ்சுக்காரர் தான். அலெக்ஸாந்திரியாவில் இவர் பிரான்ஸ் நாட்டின் உதவி கான்ஸலாக இருந்தவர். ஆனால் அந்தப் பதவியிலிருந்தபோது இவர் இதைச் சாதிக்கவில்லை. அப்போது அவருக்கு அந்த எண்ணம் மட்டும் இருந்தது. மற்றவர்களைப்போல் வியாபார நோக்கத்துடனோ, அரசியல் நோக்கத்துடனோ அவர் இதைச் சிந்திக்கவில்லை. மனித குலத்துக்குச் செய்யும் ஒரு மகத்தான பணியாக, உலகின் ஒரு புதிய அதிசயமாக இது அமைய வேண்டும் என்று எண்ணினார்.

லெஸெப்ஸ் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும்தான் இதில் தீவிரமான கவனம் செலுத்தினார். அதுவும் எதனால்? குடும்ப வாழ்வில் ஏற்பட்ட அதிர்ச்சியினால்.

தன் மனைவியையும் அருமைக் குழந்தைகளில் ஒன்றையும் அடுத்தடுத்து எதிர்பாராத விதமாக நோய்க்குப் பலி கொடுக்க நேர்ந்தது. மனைவி, மகனின்



இழப்பை அவரால் தாங்க முடியவில்லை. மீதமிருந்த இரண்டு குழந்தைகளை உறவினருடன் அனுப்பிவிட்டுக் கவலையை மறக்கக் கால்வாய் வேலையில் மூழ்கினார்.

அப்போது எகிப்தின் வைஸ்ராயாக இருந்த முகம்மது சைத் லெஸெப்ஸின் நண்பர். ஆகவே, இதைச் செயலாக்க அவருடைய உதவியைப் பெறுவதென்றும் முடிவு செய்தார். 'சூயஸ் கால்வாய் சர்வே கம்பெனி' என்று ஓர் அமைப்பு வெகு நாட்களாகவே இருந்து வந்தது. ஆனால் அது எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. லெஸெப்ஸ் இந்த அமைப்பைத் தாமே எடுத்துக் கொண்டார். பிரெஞ்சு, எகிப்து அரசாங்கங்கள் இவருடைய முயற்சிக்கு ஆசி வழங்கின.

ஆனால் இந்த மகத்தான சாதனைக்கு ஏராளமான பொருள் வேண்டுமே? என்ன செய்வது? பல நாடுகளிலிருந்து நிதி திரட்ட எண்ணினார். பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் இதில் அதிகம் நாட்டம் கொள்வார்கள். தாராளமாகப் பண உதவி செய்வார்கள் என்று நம்பினார். ஆனால் நிலைமையோ வேறு விதமாக இருந்தது. எகிப்தில் பிரஞ்சு ஆதிக்கம் வலுவடைந்துவிடுமே என்று மற்ற நாடுகள் அதிர்ச்சி அடைந்தன. தன்னுடைய கடல் ஆதிக்கம் அஸ்தமனத்துக்கு வந்துவிடுமோ என்று பயந்த பிரிட்டன் இம்முயற்சி முன்னேறாமல் தடுக்க முழு மூச்சுடன் நின்றது.

வல்லரசுகளை நம்பினால் காரியம் நடக்காது என்று உணர்ந்த லெஸெப்ஸ் பொதுமக்களிடமிருந்தே பணம் திரட்ட முடிவு செய்து எப்படியும் வேலையைத் தொடங்கிவிடுவது என்ற உறுதியுடன் எகிப்துக்குத் திரும்பினார்.

1859ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ந் தேதி பெர்டினண்டு டி லெஸெப்ஸ், பூமியில் குறியிட்டு முளைகள் அடித்து வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து ஒரு கன அடி மண்ணைத் தோண்டி எடுத்து வெளியே போட்டுக் கால்வாய் அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார். இது போன்று பல மில்லியன் கன அடி மண்ணைத் தோண்ட வேண்டிய செயல் தொடருவதற்கான ஆரம்ப விழா கொண்டாடப்பட்டு விட்டது. நூறு மைல் நீளத்துக்கு வறண்ட பாலைவனத்திடையே கால்வாய் வேலை நடந்தாக வேண்டும். தண்ணீரே இல்லாத இப்பகுதியில் தொழிலாளர்களுக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டுமே? புராதனமான மோஸஸ் நதியை விரிவுபடுத்தி அதில் சுத்த நீருக்கான ஒரு கால்வாயை முதலில் அமைத்தார் லெஸெப்ஸ்.

லெஸெப்ஸ் சிறந்த எஞ்சினீயராக இல்லாவிட்டாலும் தம் கீழ்ப் பணியாற்றும் தொழிலாளர்களைச் சிறப்பாக இயக்கி வேலை வாங்கும் திறமைசாலியாக விளங்கினார். ஐரோப்பியர்களைத் தவிர 20,000 சுதேசிகள் இக்கால்வாய் அமைக்கும் பணியில் தாமாகவே உழைக்க முன்வந்தார்கள். நவீன சாதனங்கள் ஏதும் கிடையாது. புராதன முறைப்படியே நிலம் தோண்டப்பட்டது. மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்துதான் கால்வாயை வெட்டிக் கொண்டு வந்தார்கள். அங்கு முதலில் மிகப் பெரிய அணை ஒன்று கட்டப்பட்டது — கால்வாய் வேலையின் போது கடல் நீர் உள்ளே வராதிருக்க. போர்ட் சைத் (Port Said) என்ற புதிய துறைமுகம் அமைக்கப்பட்டது. தொழிலாளர்களைத் துன்புறுத்தி வேலை வாங்கவில்லை, லெஸெப்ஸ். துரிதமாக முடிய வேண்டும் என்று விரட்டவும் இல்லை. அவர்களின் நலனில் மிக்க அக்கறையோடு இருந்ததினால் இந்த மகத்தான வேலையில் ஈடுபட்டிருந்த பல்லாயிரம் தொழிலாளர்களில் ஐயாயிரத்துக்கு ஒருவரே இறந்தார்கள்; அதுவும் இயற்கையாக. அமைக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிகள் ஈ ஓட்டிக் கொண்டிருந்தன.

ஆனால் வல்லரசுகளோ இந்தக் கால்வாயினால் பலனடைவது யார் என்பதில் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளின் அர

... கவலையை மறக்கக் கால்வாயை வெட்டினார்...

சியல் போராட்டத்தில் லெஸெப்ஸ் மிகக் குறைவாகவே கவனம் செலுத்தினார். அவருடைய கனவு, இது எல்லா தேசங்களுக்கும் பயன்படும் ஒரு சர்வ தேசக் கால்வாயாக இருக்க வேண்டும் என்பதுதான்.

கால்வாய் மென்ஸாலா ஏரியிலிருந்து பாலா ஏரிக்கு — இருபத்து எட்டு மைல்கள் — அங்கிருந்து பல காய்ந்து போன ஏரிகள் வழியாக வளர்ந்து கொண்டு வந்தது. கடல் நீர் அணையிலிருந்து திறந்து விடப்பட்டு, இருபத்தைந்து மைல் நீளத்துக்குத் தொடர்ச்சியாகப் பல ஏரிகளை நிரப்பியது. சில ஏரிகள் மிக மிக ஆழமானவை. அவை கடல் நீரால் நிரம்பப் பல மாதங்களாயின.

பணத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்பட்டது. அமெரிக்காவோ, பிரிட்டனோ உதவவே இல்லை. பெரும் பாகம் பிரான்ஸும், எகிப்துமே கொடுத்திருந்தன. லெஸெப்ஸ் அடிக்கடி பல நகரங்களுக்குப் போய்ப் பெரும் பணக்காரர்களிடமிருந்து பொருள் சேகரித்துக்கொண்டு வந்து வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தார். அரசியல்வாதிகளும், கட்டடக் கலை வல்லுநர்களும் உலகெங்கிலுமிருந்து இந்த மகத்தான சாதனையைக் காண வந்து கொண்டிருந்தார்கள்.

1869ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ந் தேதி கடைசியாக நிலத்தை அகழும் பணி தொடங்கியது. சூயஸ் கால்வாய்ப் பணி ஆரம்பித்துப் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு; லெஸெப்ஸ் முதன் முதலில் மண் தோண்ட ஆரம்பித்துப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவரது கனவு கைகூடத் தயாராக இருந்தது. செங்கடலின் நீர் அணை (டைக்)யிட்டுத் தடுக்கப்பட்டிருந்தது. மத்தியதரைக் கடல் நீர் வாய்க்கால் வழியாக வழி நடந்து செங்கடல் அருகே வந்திருந்தது அதைச் சந்திக்க. இரு கடல்களும் புளிப்பு ஏரியில் (Bitter lake) இணைய வேண்டும். செங்கடலை நிறுத்தி வைத்துள்ள சுவரை முதலில் உடைத்து அதைக் கால்வாய்க்குள் பாய விட்டு இரண்டாவது அணையில் கட்டுப்படுத்திய பிறகு இரு கடல்களையும் கலக்கச் செய்ய வேண்டும். இதுதான் ஏற்பாடு. ஒவ்வொருவருடைய உள்ளமும் தடதடவென்று அடித்துக் கொண்டன. தடையை உடைத்துக் கடல் நீரைப் பெருக விடும்போது என்ன நேருமோ?

பயந்தபடியே செங்கடல் விடுபட்டதும் மூர்க்காவேகத்துடன் வெறிகொண்ட நிலையில் கால்வாயில் பிரவகித்தபோது கரையில் இருந்த யந்திரங்கள், கூடாரங்கள் எல்லாமே தவிடு பொடியாயின. அதன் வேகமும் வெறியும் இரண்டாவது டைக்குக்கு அதைத் தடுத்து நிறுத்தும் சக்தி உண்டா என்ற ஐயத்தை ஏற்படுத்தி விட்டது. தொழிலாளிகள், இங்குமங்கும் ஓடி டைக் உடையாதிருக்கப் பாடுபட்டனர். அப்போது அங்கிருந்தோரின் மன நிலை எப்படி இருந்திருக்கும்?

நல்ல இதயம் படைத்த லெஸெப்ஸைக் கடவுள் கைவிடவில்லை. மறுநாள் காலை செங்கடல் அமைதியாகிவிட்டது. இரு கடல்களும் எதிரெதிரான டைக்ஸ்களில் கட்டுண்டு நின்றன. மெள்ள மெள்ள அவைகளைக் கலக்கச் செய்தார்கள். இரு கடல்களும் கலக்கும் அந்தக் காட்சியைக் கண்களில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டு நின்ற லெஸெப்ஸ், ''முப்பத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால் செங்கடலின் நீர் புனித மோஸஸின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ஒதுங்கி நின்றது. இன்று எகிப்து அரசாங்கத்தின் ஆணையை ஏற்றுக் கூடிவிட்டன'' என்றார்.

ஒரு கடலிலிருந்து மறு பக்கக் கடலுக்குப் பிரயாணம் செய்ய இப்போது பதினைந்தே மணி நேரம்தான் ஆயிற்று.


கால்வாய் கட்டி முடிக்கப்பட்ட அந்த ஆண்டில் இதில் 500 கப்பல்கள் பிரயாணம் செய்தன. நூறு மைல்கள் நீளமுள்ளது இக்கால்வாய். இதில் 87 மைல்கள் நேர் கோடு போலச் செல்லுகிறது. அண்மைவரை இக்கால்வாயில் ஒரு வருஷத்தில் 30000 கப்பல்கள் போய்வந்தன.

ஆரம்பத்தில் பிரிட்டிஷாரால் எதிர்க்கப்பட்ட இத்திட்டம் முடிவடைந்ததும், விக்டோரியா மகாராணியாரால் பெரிதும் பாராட்டப் பெற்றது. சூயஸ் கால்வாய் கம்பெனியின் பங்குகளில் பாதியைப் பிரிட்டன் வாங்கியது — 1875ல். எல்லா நாட்டுக் கப்பல்களும் இதன் வழியாகப் போகலாம் என்ற உறுதிமொழியில் பங்குதாரர்கள் கையொப்பமிட்டனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து இக்கால்வாயைத் தனது தேசிய உடைமையாக்கி இதன் பங்குதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுத்துத் தன்னுடையதாக்கிக் கொண்டது.

சண்டை, சச்சரவு, மனக் கசப்பு ஆகியவற்றிடையே தொடங்கப்பட்ட இக்கால்வாய் இன்றும் அதே உணர்ச்சிகளுக்கிடையேதான் சிக்கியிருக்கிறது.

சமாதானத் தூதுவர் கிஸிஞ்சரை வரையுங்களேன் - தாணு



அடுத்த இதழில் யார்?



யூதர்களின் புனித பூமி

கிருஷ்ணவேணி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆலிவ் மர வரிசைகளிடையே சிவப்புக் கூரையோடு கூடிய வீடுகள் வரிசை காட்டி நின்றன. அந்த அழகிலும் ஒழுங்கிலும் மயங்கிய கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் யாகோவ் விளக்கினான்.

''அவைகள்தான் கிபுட்ஸ் (Kibbuts) நான் அங்குதான் வசிக்கிறேன். நான் மட்டுமல்ல. எல்லா இஸ்ரேலியச் சிறுவர்களும் சிறுமியர்களும் கிபுட்ஸ்களில் தான் வாழ்ந்தாக வேணும். கிபுட்ஸ் என்பது உழைப்பாளிகளின் பண்ணை. அவரவர்களுக்குத் தெரிந்த தொழிலை அவரவரும் அங்கு செய்யலாம். யாருக்கும் எவ்வித ஊதியமும் கிடையாது. நிலம், நிலத்தில் விளையும் பொருள்கள், மிருகங்கள், யந்திரங்கள் எல்லாமே எல்லோருக்கும் சொந்தம்.''

யாகோவ் கூறிய செய்தியினால் வியந்து போனார்கள், பட்டுவும் கிட்டுவும். ''அப்படியானால் - நீங்கள் உங்கள் பெற்றோருடன் வசிப்பதே இல்லையா?'' என்று கேட்டான் கிட்டு.

''அநேகமாக எல்லா இஸ்ரேலிய இளைஞர்களும் குழந்தைகள் இல்லத்தில்தான் வசிக்கிறோம். காலையில் பள்ளிக்கூடம் போவோம். பிற்பகலில் பெரியவர்களுக்கு உதவியாக வயல்களிலோ, தொழிற்சாலைகளிலோ வேலை செய்வோம். சில கிபுட்ஸ்களில் சிறுவர்களாலேயே நிர்வகிக்கப்படும் பண்ணைகளும் உண்டு. சின்னக் குழந்தைகளுக்குக்கூட அவர்களுக்கேற்ற வேலை உண்டு, கிபுட்ஸில். கோழிக் குஞ்சுகளையும், ஆட்டுக் குட்டிகளையும் பராமரிப்பது அவர்கள் வேலை.''

''உன்னுடைய கிபுட்ஸில் நீ என்ன பயிரிடுகிறாய்?'' என்று கேட்டாள் பட்டு.

''ஆலிவ் மரங்கள், திராட்சை, மெலன், சோளம் ஆகியவைகளைப் பயிர் செய்கிறோம். மற்றக் கிபுட்ஸ்களில் ஆரஞ்சு, வாழை, பருத்தி, சர்க்கரை பீட்ரூட் ஆகியவை பயிராகின்றன. 'எங்கள் நாட்டு ஆரஞ்சு சுவைக்குப் பெயர் பெற்றவை' என்று கூறிக் கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் ஒரு கூடை நிறையப் பளபளக்கும் ஆரஞ்சுப் பழங்களைக் கொடுத்தான் யாகோவ்.

அவன் அப்பா இன்னும் 'வந்த பாடில்லை. அவர் டெல் அவிவ் நகரில் வேலைக்கு அனுப்பப்பட்டிருந்தார். யாகோவ் விரும்பினால் அவனும் கூட அங்கே வேலைக்குப் போயிருக்கலாமாம். ஆனால் அவன் காலிலி நகரிலுள்ள கிபுட்ஸ் பண்ணையிலேயே வேலை செய்வதை விரும்பினான், அவன் தங்கை இதற்கு நேர்மாறு. அவளுக்கு டெல் அவிவ்தான் பிடித்திருந்தது. ஏனென்றால் வயலின் வாசிப்பதில் அவள் கெட்டிக்காரி. நகரத்தில் இருந்தால்தானே இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியும்?

யாகோவ், கிட்டு, பட்டுவுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவன் முதுகில் ஒரு பையன் வந்து குத்தினான் — நட்புடன்தான்! அவன் பெயர் யுதா. மொராக்கோவிலிருந்து வந்த யூத அகதி அவன். இளைஞர் அலியா கழகம் அவனை இங்கு அனுப்பியிருந்தது. அலியா என்றால், பிறநாட்டுக்குக் குடியேறுதல் என்று பொருள். யாகோவும் இரண்டாம் உலகப் போரின்போது இப்படி அகதியாக வந்தவன்தானே.

'' இந்த முப்பது ஆண்டுகளில் அநாதைகளாகி விட்ட அகதிகளான லட்சத்துக்கு மேற்பட்ட யூதக் குழந்தைகள் உலகம் முழுவதிலுமிருந்து இஸ்ரேலுக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறார்கள். முதலில் இங்கு வந்ததும் அந்தக் குழந்தைகள் தாங்கள் வாழ்ந்த நாட்டின் மொழியையே பேசும். நாளடைவில் ஹீப்ரு மொழியில் அவர்களுக்குப் பயிற்சி தரப்படும். எனக்கு ஹீப்ரு இப்பொழுது சரளமாக வரும். யுதாவுக்கு நான் ஹீப்ரு மொழி கற்றுத் தருகிறேன்'' என்றான் யாகோவ் பெருமையுடன்.

''பதின்மூன்று வயது வரும் வரையில் நாங்கள் 'பத்துக் கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும். அவைகளில் சில கடினமானவை. தியாகப்பு, சாத

★ மேலே: யூதக் குழந்தை தன் நினைவுப் பரிசாக மரம் நடுகிறது.

னங்கள் ஏதுமின்றி வெளியிடங்களுக்குச் சென்று தங்குதல், பெரியவர்களோடு நாள் முழுவதும் வயல்களில் வேலை செய்தல், கிபுட்ஸின் நன்மைக்காக நல்ல காரியங்கள் பல செய்தல்—இப்படிப் பொறுப்புள்ள மனிதனாக வாழ்வதற்கான அறிகுறிகளைக் காட்ட உழைக்க வேண்டும்.

''உழைப்பு, உழைப்பு, உழைப்பு — இதுதான் இஸ்ரேலியர்களாகிய எங்களுடைய உயிர்மூச்சு. ஏனென்றால் இஸ்ரேல் புதிய நாடு. உலகெங்கிலுமுள்ள யூதர்கள் இங்கு வந்து வாழ விரும்புகிறார்கள்—வருகிறார்கள். ஆகவே அவர்களுக் கெல்லாம் ஏராளமான வீடுகள் வேண்டும். வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள் இவைகளையெல்லாம் கட்டியாக வேண்டியிருந்தது. ஏராளமாக விளைவதற்கு ஏற்றபடி பூமியை மாற்ற வேண்டியிருந்தது. தங்களுக்குக் கிடைத்த புனித பூமியை விரைவில் செழிப்புடையதாக்கத் துடித்தனர் இஸ்ரேலியர்.

''நீங்கள் எங்கு சென்றாலும் இஸ்ரேலியர் கடினமாக உழைப்பதைக் காண்பீர்கள். மலைப் பிரதேசத்தில் சாலைகளையும், ரயில் பாதைகளையும் சிலர் அமைத்துக் கொண்டிருப்பார்கள். பாலைவனப் பகுதிக்கு நீர் கொண்டு செல்லும் வாய்க்கால்களைத் தோண்டிக் கொண்டிருப்பார்கள் சிலர். வேறு சிலர் புதிதாக மரங்களை நட்டுக் கொண்டிருப்பார்கள்.

''எங்கள் நாட்டிலும் கூட இந்த மரம் நடுவதை ஒரு விழாவாகக் கொண்டாடுகிறோம்'' என்றாள் பட்டு.

''நாம் விழாக் கொண்டாடுவதோடு சரி. மரம் வளர்கிறதா என்று யாரும் கவனிப்பதில்லையே!'' என்றான் கிட்டு.

''எங்கள் நாட்டில் அப்படி யில்லை. பசுமை நிறையத் தேவை எங்களுக்கு. பூமியை வளமாக்கவும், ஈரத்தை ஈர்க்கவும் நாங்கள் ஏராளமாக மரங்களை நடுகிறோம். டு புஷ்வாட் (Tu B'shvat) என்பது மரம் நடுவதற்கு எங்களுடைய தேசிய நாள். ஒவ்வொருவரும் ஒரு மரம் நடுவார்கள் அன்று. சில வேளைகளில் ஒருவர் மற்றவருக்கு ஏதாவது அன்பளிப்புத் தரவேண்டுமானால் இஸ்ரேலியர்கள் 'நான் உனக்காக ஒரு மரம் நட்டுள்ளேன்' என்று கூறுவார்கள். நான் இதுவரையில் என் அன்பளிப்பாக ஐந்து மரங்களை நட்டுள்ளேன்'' என்றான் யாகோவ்.

''நானும் யுதாவும் பள்ளியில் மிகவும் கடுமையாக உழைத்துப் படிக்கிறோம். ஏனென்றால் எங்கள் கிபுட்ஸ் எங்களை ஹைஃபாவிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப்பப் போகிறது. அங்கு கல்வி பயின்றதும் நாங்கள் இஸ்ரேலின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் உழைக்க அனுப்பப்படுவோம். இஸ்ரேலில் ரொம்பவும் தண்ணீர்ப் பஞ்சம் என்பது உங்களுக்குத் தெரியாதே?'' என்று கேட்டான் யாகோவ்.

''உங்கள் ஆரஞ்சின் சுவையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே? எத்தனை சாறு? அத்தனையும் தித்திப்பு!'' என்று சப்புக் கொட்டினாள் பட்டு.

''Dead Sea என்னும் கடலைத் தவிர எங்கள் உள்நாட்டில் இரு சிறு நதிகளும் ஓர் ஏரியும் மட்டுமே உள்ளன. ஆகவே தண்ணீருக்கு ரொம்பத் தட்டுப்பாடு. நதிகள் கோடையில் வறண்டுவிடும். ஆகவே நீர் இருக்கும்போது அவைகளைச் சேமித்துக் குழாய்கள் மூலம் வறண்ட பகுதிகளுக்கு அனுப்புகிறோம்.

''யூதர்களான நாங்கள் எங்கள் தாயகத்துக்குத் திரும்பியபோது இஸ்ரேல் என்பது 8000 சதுரமைல் பரப்புள்ள ஒரு வறண்ட நாடாகத்தான் இருந்தது. அராபியக் குடியானவர்கள் மிக மோசமான முறையில் பயிர்த் தொழில் செய்து வந்தார்கள். இன்றோ நாட்டின் பெரும் பகுதியில் வளம் கொழிக்கிறது. பலவிதப் பயிர்களையும் பயிர் செய்கிறோம். நீரைச் சேமித்துச் சிக்கனமாகப் பயன்படுத்திப் பலன் பெறும் வழி யூதர்களுக்கு நன்கு தெரியும்.''

★ யாகோவும், யுதாவும் கிபுட்ஸில் வேலை செய்கிறார்கள்.





உலகிலுள்ள மூன்றே மூன்று பெண் பிரதமர்களுள் வயதில் மூத்தவரான இஸ்ரேல் பிரதமர் கோல்டா மீர் இவர்தான்.

''இஸ்ரேலில் இப்போது என்னென்ன விளைவிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் கிட்டு.

''வடக்குப் பகுதியில் — அது சமவெளி — ஆரஞ்சு எலுமிச்சை ஆகியவைகளையும் மலைப் பகுதிகளில் ஆலிவும் புகையிலையும் பயிராகின்றன. கிபுட்ஸிம், மோஷாவிம் என்ற அமைப்புக்களின் மூலம்தான் விவசாயம் நடைபெறுகிறது. இந்த அமைப்புக்களில் பயிர் விளைவிக்கப்படும், கால்நடைகள் பராமரிக்கப்படும், காய்கறிகளும், திராட்சையும் பயிரிடப்படுகின்றன. இருந்தாலும் நாங்கள் உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறோம். தேவைக்கேற்பப் போதுமான விளைச்சலில்லை.

''தென் பகுதியை நெகேவ் (Negev) என்பார்கள். இது ஒரு வறண்ட பாலைவனப் பகுதி. ஆனால் இங்கு கொஞ்சம் எண்ணெய் கிடைக்கிறது. செத்த கடல் பகுதியில் விலைமதிப்புள்ள இரசாயனப் பொருள்களும், உப்பு, பொட்டாஷ் ஆகியவையும் கிடைக்கின்றன.''

தூரத்தில் லாரி (டிரக்) வருவதைக் கண்டுவிட்டன யாகோவின் கண்கள். அப்பப்பா! அப்போதுதான் அதில் எத்தனை ஒளி! பெற்றோரையும் சகோதரி ஸாராவையும் காணப்போகும் மகிழ்ச்சி! யாகோவின் அருகே வந்ததும் டிரக் நின்றது. கூச்சலும் குதூகலமும் கொம்மாளமுமாக. டிரக்கில் பல குடும்பங்கள் இருந்தன. யாகோவும் யுதாவும் பின்பக்கத்தில் தாவி ஏறிக் கொண்டு கிட்டுவையும் பட்டுவையும் உள்ளே ஏற்றிக் கொண்டார்கள். டிரக் கிளம்பியது அவர்கள் கிபுட்ஸை நோக்கி.

மறுநாள்தான் அறுவடைத் திருவிழாவாம். சின்னக் குழந்தைகூட வெள்ளை நிற ஆடை அணிந்து தலையில் பூமாலை சூடி, தோட்டத்தில் பழுத்த முதல் பழத்தைக் கையிலேந்திச் செல்லும் காட்சி கண்கொள்ளாததாக இருக்குமாம். இந்த ஊர்வலத்துக்குப் பிறகு விருந்து, பாட்டு, நடனம். முடிவில் இசை விருந்து. அப்போது ஸாரா தன் வயலினை இசைப்பாள் என்று விவரித்தான் யாகோவ்.

''இஸ்ரேலில் ஒவ்வொருவரும் உழைப்பை விரும்புவது போலவே விழாக்களையும் விரும்புகிறோம். சில விழாக்கள் மத சம்பந்தமானவை. சில யூதர்களின் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டவை.

''எனக்கு டிசம்பரில் வரும் சன்னுகா (Channukah) தீப விருந்துத் திருவிழாதான் பிடிக்கும். யுதா மார்ச் மாதம் வரும் பூரிம் (Purim) பண்டிகையைத்தான் விரும்புவான். அப்போது டெல் அவிவ்வில் பிரும்மாண்டமான கேளிக்கை ஊர்வலம் நடைபெறும். இரவெல்லாம் தெருவெங்கும் நடனம்தான்'' என்றான் யாகோவ்.

''நாங்கள் இங்கு குடியேறியபோது திருவிழாக்களோ, கேளிக்கைகளோ கிடையாது'' என்றார் யாகோவின் அப்பா. ''அதற்கெல்லாம் பண வசதியும் கிடையாது, பொழுதும் கிடையாது. பொட்டல் வெளிதான். கூடாரங்களில் வாழ்ந்து, மிக மிக எளிய உபகரணங்களைக் கொண்டு உழைத்து இன்றைய இஸ்ரேலை உருவாக்கினோம். இன்று வளமான நிலத்தில் செழித்து வளரும் பயிர் பச்சைகளைக் கொண்ட இஸ்ரேலில் எங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்..''

''கிபுட்ஸ்களில் நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஏன் இல்லாமல்? கிபுட்ஸில் உள்ள ஒவ்வொருவரும் தனக்காகவோ தன் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காகவோ உழைக்கவில்லை. எல்லோருடைய மகிழ்ச்சிக்காகவும் உழைக்கிறார்கள். ஒவ்வொருவருடைய தேவைகளும் கவனிக்கப்படுகிறது. ஆனால் யாருக்கும் ஊதியம் என்று ஏதும் கிடையாது. கிபுட்ஸுக்கு வெளியே தொழில் செய்பவர்களிடம் தான் பணப் புழக்கம் இருக்கும்'' என்று விளக்கினார் யாகோவின் அப்பா.

''இஸ்ரேலில் உள்ளவர்களெல்லாம் யூதர்களா?'' என்று கேட்டாள் பட்டு.

''அதுதான் இல்லை. இங்கு எவ்வளவோ அராபியர்களும் இருக்கிறார்கள். வெகு காலமாக இங்கேயோ அல்லது அருகிலோ வளர்ந்து வாழ்ந்தவர்கள். இவர்களுக்கு பெடுயின் (Bedouin) என்று பெயர். பாலைவன அராபியர்கள் கறுப்பு அங்கி அணிந்து ஒட்டகங்களில் உலவுவார்கள்'' என்றான் யுதா.

''இஸ்ரேல் நாடு பழைமையும் புதுமையும் கலந்த ஒரு விநோதமான நாடு. புதிய தலைநகரம் டெல் அவிவ். பழைய தலைநகரம் ஜெருஸலம். இங்குள்ள வீடுகள் ஐம்பதாண்டுகளுக்குள் கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகள். இஸ்ரேலின் மறுபக்கத்தில் பழங் காலத்துக் கட்டிடங்கள், கோயில்களின் இடிபாடுகளைக் காணலாம். அவைகளில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையானவை. சாலமனின் கோயில் இடிக்கப்பட்ட இடத்தில் ஓர் அற்புதமான மசூதியைக் கட்டியிருக்கிறார்கள். அதற்கு 'டோம் ஆஃப் தி ராக்' என்று பெயர். பார்க்க வேண்டிய கட்டிடம்'' என்றான் யாகோவ்.

''இன்னோர் அதிசயமும் எங்கள் இஸ்ரேலில் உண்டு. ஜெருஸலத்திலிருந்து பதினைந்து மைலில் ஜெரிக்கோ என்றொரு பகுதி. இங்கு ஒரு நகரம் இருக்கிறது. அதுதான் உலகிலேயே மிக மிகப் பழைமையான நகரம். 8000 ஆண்டுகள் அதன் வயது. கடல் மட்டத்துக்கு ஆயிரம் அடிகள் கீழே உள்ளது அந்த நகரம்'' என்றான். கிட்டுவும் பட்டுவும் வியந்து போனார்கள்.

''கற்பனை உலகில் சஞ்சரிக்கிறாற் போலிருக்கிறது'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் பரமேசுவரத் தாத்தா.

''இஸ்ரேலுக்குப் போய் வந்ததை நினைத்துக் கொண்டோம். பாவம், அவர்கள் மீது மறுபடியும் தாக்குதலாமே!'' என்றான் கிட்டு.

''தாக்குதலெல்லாம் முடிந்து சமாதானத்துக்கு வந்து விட்டார்கள் அராபியர்களும் இஸ்ரேலியர்களும். அது தெரியாதா உங்களுக்கு? சமாதானத்துக்கு முயற்சி செய்தவர் உலக சமாதானத்துக்காகப் பாடுபட்டதற்காக நோபல் பரிசு பெறப் போகிறவரான கிஸ்ஸிஞ்சர்தான். இவரும் ஒரு யூதர் என்ற ரகசியம் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் தாத்தா.

''ஏசு கிறிஸ்துவே யூத குலத்தில் பிறந்தவர்தானே!'' என்றாள் பட்டு.

தெரியுமா?

875. சூரியனிடமிருந்து பூமி உத்தேசமாக எத்தனை தூரத்தில் உள்ளது என்று கூற முடியுமா?

876. அலாமோ (Alamo) என்னுமிடத்தில் 1836ல் ஒரு போர் நிகழ்ந்தது. இந்த அலாமோ எங்குள்ளது?

877. ஏசுபிரானால் உயிர்ப்பிக்கப்பட்ட பெண்ணினுடைய தந்தையின் பெயர் தெரியுமா?

878. பிரிட்டிஷ் நாணயமான பார்த்திங்கில் ஒரு பறவையின் உருவம் இடம் பெற்றிருக்கிறது. அது எந்தப் பறவை?

879. ஆண்டிகா (Antiqua) எங்குள்ளது?

880. ரெஸ்பிளண்டண்ட் (Resplendent) என்றால் தெரியுமா? (அகராதியை அடிக்கடி பார்க்கும் பழக்கம் வேண்டும்)

881. முதன்முதலாகக் கட்டப்பட்டதும் மிகப் பழமையானதுமான கலங்கரை விளக்கு எங்குள்ளது?

882. பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளிலேயே மிகவும் இளமையானவர் யார் தெரியுமா?


883. மராதான் ஓட்டத்தின் அதிகாரபூர்வமான தூரம் எத்தனை மைல்கள்?

884. ஐரோப்பாவில் உள்ள ரைன் நதி எந்த நாட்டில் அதிக தூரம் ஓடுகிறது?

885. கோண்டார் (Condor) என்பது ஒரு பெரிய பறவை, திசை காட்டும் கருவி, ஒரு மிருகம் இதில் எது சரி?

886. ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகமான ஒதெல்லோவில் ஒதெல்லோவின் மனைவியுடைய பெயர் என்ன?

887. ஆக்ஸ்போர்டுக்கும் கேம்பிரிட்ஜுக்கும் முதன் முதலில் படகுப் போட்டி நடந்தது எந்த ஆண்டில்?



888. இந்தச் சாலை அடையாளம் எதைக் குறிக்கிறது?

889. பிஜித் தீவுகள் எந்தக்கடலில் உள்ளன?



890. இந்த மனிதர் வைத்துக் கொண்டிருக்கும் இசைக் கருவியின் பெயர் தெரியுமா?

891. சர்வதேச இளைஞர் இல்லக் கழகம் (இண்டர்நேஷனல் யூத் ஹாஸ்டல் அசோசியேஷன்) தொடங்கப்பட்டது எந்த ஆண்டு என்பது தெரியுமா?

892. கன்ஃபூஷியஸ் வேதாந்தியா, இசைக் கலைஞரா, ஓவியரா?

893. கிரேக்க இதிகாசத்தில் பாரிஸ் என்பவன் தன்னிடமுள்ள ஆப்பிளை மூன்று அழகிகளில் ஒருவருக்குக் கொடுப்பதாக வருகிறது. அம்மூவரின் பெயர் ஹெரா, அதெனா, அஃப்ரோடைட். இம்மூவரில் யாருக்கு ஆப்பிள் கிடைத்தது?

894. பூமியில் ஹீலியம் வாயுவை முதன் முதலில் கண்டுபிடித்தவர் யார்?

895. இந்தியாவின் முதல் மகாராணி யார் தெரியுமா? (ஆங்கிலேயர்களின் முடிவுப்படி)

896. லண்டனில் ஓரிடத்தில் 'புல்ஸ்' 'பேர்ஸ்' (காளைகள், கரடிகள்) என்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துவார்கள். அது எங்கே தெரியுமா?

897. கார்ப்பொரல் வயலட் என்று கீழ்க்கண்டவர்களில் ஒருவர் அழைக்கப்பட்டார். அது யார்? லெனின், நெப்போலியன், வெலிங்டன்.

898. காற்றிலுள்ள ஈரத்தை இழுத்துக்கொள்ளும் பொருள்களுக்கு ஒரு ரசாயனப் பெயர் உண்டு. அது என்ன?

899. புல்லி ஆஃப்— என்று ஆரம்பமாகும் விளையாட்டு ஹாக்கி, கால்ஃப், டென்னிஸ் - இவைகளில் எது?

900. மரச் சட்டத்தோடு இடையே கம்பங்களில் பத்து எண்ணிக்கையில் மணிகளைக் கொண்ட கணக்கிடும் மணிச் சட்டத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

தெரியுமே!

விடைகள்: 875. 93 மில்லியன் மைல்கள். 876. டெக்ஸாஸ் மாகாணத்தில். 877. ஜெய்ரஸ் (Jairus) 878. ரென் (wren) என்ற பறவை. 879. லீவார்டு தீவுகளில். 880. ஜொலிக்கின்ற என்று பொருள். 881. எகிப்தில். 882. வில்லியம் பிட் தி யங்கர். 883. 26 மைல்களும், 385 கெஜங்களும். 884. ஜெர்மனியில். 885. பெரிய பறவை. 886. டெஸ்டிமோனா. 887. 1829ல். 888. ஹம்ப் பாக் (Hump Back) பாலத்தை. 889. பசிபிக் கடலில். 890. ஆல்ஃபீப் ஹார்ன் - ஸ்விட்ஸர்லாந்தின் ஆல்ப்ஸ் மலையில் வாழும் மக்கள் ஊதும் ஒருவகை வாத்தியம். 891. 1932ல். 892. வேதாந்தி. 893. அஃப்ரோடைட்டுக்கு. 894. வில்லியம் ராம்ஸே. 895. க்வீன் விக்டோரியாதான் இந்தியாவின் முதல் எம்பரஸ். 896. பங்கு மார்க்கெட்டில். 897. நெப்போலியன். 898. ஹைக்ரோஸ்கோபிக் (Hygroscopic) 899. ஹாக்கி. 900. அபகஸ் (Abacus)



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக்கணக்கை தாமே நடத்தலாம்.

'கோகுல்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

வளரும் குழந்தைகளுக்கு இனிய போர்ன்விடா!



சக்தி. வளரட்டும்! பள்ளியிலும்... விளையாட்டிலும்!

சக்தி வளரட்டும்! பள்ளியிலும் விளையாட்டிலும், இன்றும் என்றுமே வெற்றி அவனுக்கே. ஆம்! அவன் சுவைத்துப் பருகுவது போர்ன்விடா. ஊட்டமளிக்கும் **கோகோ,** பால், மால்ட், சர்க்கரை இவை இனிதே கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கியுள்ளது அவனுடைய ஒளிமிக்க எதிர்காலம்.



காட்பரிஸ்
போர்ன்விடா சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் தீஞ்சுவைக்கும்

GSM-0449 TAM


ராசுவும் வாசுவும் வேட்டையாடிய படலம்...
சுட்டிப் பயல்கள் பறந்தனராம் ஜெட் விமானத்திலே.... ஆப்பிரிக்கா
வரவேற்றானும் வேடர்தலைவன், குறை வைக்காமல் உபசரித்தான்
வேட்டைக் கூட்டம் வெகு ஜோராய் காட்டு வழியில் கிளம்பியதே.
குரங்குகளோ குரங்குகள் கூடிப் பழமரங்களிலே கூச்சலிட்டனவே
வாசுவைக் குரங்குகள் திடீரென வட்டமிட்டன; பழங்களையும் சட்டென மறந்துவிட்டனவே.
பரவசமூட்டி யாவரையும் பழரசமுடனே கவருபவை பாப்பின்ஸ் மிட்டாய்களே.
சொக்கும் இன்பம் சொட்டும் இனிமை, பலே ஜோர்
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
5 பழரசச் சுவைவகைகள்— ராஸ்ப்பெர்ரி, அன்னாசி, எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி ஒவ்வொரு சுருளிலும் 13 மிட்டாய் வில்லைகள்.
PARLE
POPPINS